Registered No. M. 5068

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஐப்பசி௴ 30௳ 15—11—1948 ஹிஜ்ரி 1368 மொஹரம்௴ 13௳ திங்கட்கிழமை. } இதழ் 40

அரசியல் புரட்சி

பிரிவினைக்குப்பின் துன்பங்களும், அதன் காரணங்களும்

மேல் நாட்டு ஜன நாயக விஷத்தன்மை.

—(மௌலானா அபுல் ஆலா மவ்தூதி)—

மௌலானா அபுல் ஆலா மவ்தூதியை அறிமுகம் செய்துவைக்க வேண்டிய அவசியமில்லை உலக முஸ்லிம்கள் அவரை நன்கு அறிவர் கீழ்வரும் அறிக்கைக்குப் பிறகு அவர் பாகிஸ்தான் அரசாங்கத்தால் சிறைக்குள் தள்ளப்பட்டாராயினும் பாகிஸ்தானிலிருந்துக்கொண்டே இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு தேவையான அஞ்சா நெஞ்சம் படைத்த பெருமை அவரைப்போன்ற பெரியார்களுக்கே உரித்தாகும். பாகிஸ்தான் ஆட்சி, அதிகாரவர்க்கத்தினரின் ஊழல்கள் லீக் தலைமையால் நேர்ந்தகேடுகளை தங்குதடையின்றி இதில் கண்டித்திருக்கிறார். கட்டுரையை ஒரு எழுத்தும் விடாமல் படிக்கும்படி வாசகர்களை கேட்டுக்கொள்ளுகிறோம். — ஆசிரியர்.

பத்துப் பதினேறு வருஷங்களுக்குமுன், ஒரே மூச்சில், ஏழு மாகாணங்களில் அதிகாரத்துக்கு வந்த காங்கிரஸையும், தலைவர்களை விட்டு பொது முஸ்லிம்களுடன் தொடர்புகொள்ள பண்டித நேரு முயன்றதையும் பார்த்து, ஹிந்துக்களின் தேசியயெழுச்சியை, முஸ்லிம்கள் அபாயமென்று நினைக்க லாரம்பித்தனர் அன்று முஸ்லிம்களில் இரண்டு கோஷ்டிகளிருந்தன

ஆங்கிலேய உற்பத்தியே அபாயமென்ற எண்ணம்; அபாயமாவது; ஆபத்தாவது; அதெல்லாம் வீண் சந்தேகம்; நியாயமாகப் பெருகிவரும் புரட்சிப் புனலில் தயக்கமின்றிப் பாய்ந்து கரையேறுவதுதான் சரியென்பது ஒரு சாராரின் அபிப்பிராயம்

நிச்சயமாகவே அபாயம் வந்துவிட்டது; இது நாட்டின் சுதந்திரவெழுச்சியல்ல; ஹிந்து ஆதிக்க எழுச்சியேயாகும்; இதிலிருந்து தப்ப வழி செய்ய வேண்டியதவசியம்; முஸ்லிம்கள் இதில் சேருவது சமூகத் தற்கொலைக் கொப்பாகுமென்பது இன்னொரு கோஷ்டியின் வாதம்.

முதல் கோஷ்டியில் இஸ்லாமைக் கற்றுணர்ந்த பெரியார்களும், பழுத்த அரசியல் மேதாவிகளுமிருந்தனர். ஆயினும் அவர்கள் வெளியிட்ட அபிப்பிராயம் பாமர முஸ்லிம்களின் சாதாரண அறிவுக்கு எட்டவில்லை. ஆகையால் அதை லட்சியம் செய்யாமல் பெரும்பான்மை முஸ்லிம்கள் இரண்டாவது கோஷ்டியின் வாதத்தை ஒப்புக்கொண்டனர்.

பிறகு, ஹிந்து ஆதிக்கத்தையெதிர்க்க முஸ்லிம்கள் எம்மாதிரி முறைகள் அனுசரிப்பதென்ற பிரச்னையில் இரண்டாவது கோஷ்டியிலும் அபிப்பிராய பேதமேற்பட்டது.

இஸ்லாமுக்கு முரணான மேல்நாட்டு ஜனநாயக முறைமூலம் ஹிந்து ஆதிக்கத்தையெதிர்ப்பது கொள்கை பூர்வமாகவும் தவறு; நடைமுறையிலும் அதனால் முஸ்லிம்களுக்கு நாசமே விளையும். ஒரு சிறிய பிரதேசத்தைத் தவிர இந்தியா பூராவிலும் சிறுபான்மையாகவிருக்கும் முஸ்லிம்கள் வகுப்புக்கிளர்ச்சியால் அழிவைத்தவிர வேறொன்றுமடைய முடியாது என்ற முடிவுக்கு வந்தவர்கள் முஸ்லிம்களை நோக்கி 'நீங்கள் ஒரு வகுப்பினராக மட்டுமிருந்திருந்தால் இதரபிரதேசங்கள் பற்றி கவலைப்படாமல் உங்களுக்குச்சேரவேண்டிய பிரதேசங்களை மட்டும் பாதுகாத்துக்கொள்வதைத்தவிர உங்களுக்கு வேறுவழியே

இடையாதென்பது வாஸ்தவந்தான். ஆனால் நீங்கள் ஒரு வகுப்பினர் மட்டுமல்ல; ஒரே ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களுமாவீர்கள். அன்று வசப்படுத்தியதைப்போலவே இன்றைக்கும் உலகத்தை வசப்படுத்த வல்ல வசிய சக்தியான இஸ்லாம் உங்கள் ஸ்தாபனத்தின் கொள்கையாகும். எனவே நீங்கள் அவநம்பிக்கை பட்டு போர்த்திட்டம் வகுப்பதற்கு எவ்விதக் காரணமுமில்லை அரசியல், கலாசார உரிமைகளுக்காக போராடும் சிறுபான்மை வகுப்பினரென்று நீங்கள் தவறாக மேற்கொண்டிருக்கும் நிலையை விடுங்கள். வாழ்க்கைப்பிரச்னைகளை தீர்ப்பதில் இதர திட்டங்களை விட சிறந்ததோர் திட்டத்தை சமர்ப்பிக்கும் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களென்ற உங்கள் உண்மையான நிலையை மேற்கொள்ளுங்கள். இந்த லட்சியத்துடன் எழுவீர்களாயின், லட்சிய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான திட்டமே இஸ்லாமென்று செயலளவில் நிரூபித்துக் காட்டுவீர்களாயின், அண்டையில் வசிப்பவர்களுக்கு உங்கள் ஒழுக்கத்தின் உயர்ச்சியை உணர்த்துவீர்களாயின் வெகுசீக்கிரம் இன்றைய நிலைமை அடியோடு மாறிவிடுமென்று நீங்கள் நிச்சயமாக நம்பலாம். அந்நிலையில் இந்தியாவின் தலைமை உங்களுக்கே உரித்தாகும். உங்களைக்காத்துக்கொள்ள நீங்கள் கவலைப்படுவதற்கு பதிலாக உங்கள் யெழுச்சியிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள உங்கள் எதிரிகள் கவலைப்படுவர்" என்று யோசனை கூறினார்கள்.

"நான் ஒரு வாசகத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். அதை யேற்பீர்களாயின் அரேபியாவும் வெளியுலகமும் உங்கள் மேற்பார்வையிலிருக்கும்" என்று குரைஷ் ஜாதியினருக்கு நபியவர்கள் சொல்லி வந்த புத்திமதியாகவே இதுவுமிருந்தது. ஆயினும் முஸ்லிம்கள் இதில் அபாயமிருப்பதாகவும் நாட்டில் தங்களுக்கு இடமேயில்லாது போய்விடுமென்றும் ஆட்சேபித்தனர். இதிலுள்ள சாத்தியங்களை உணர்ந்து அதன்படி நடக்க முன்வந்தவர்கள் சமூகம் பூராவிலும் வெகு சிலரேயிருந்தனர். இப்படியாக இந்த உண்மை வழி முஸ்லிம் சமூகத்தால் மேற்கொள்ள முடியாமலேயே போய்விட்டது

"நாம் தனி சமுதாயம்; எங்கள் மதம் வேறு; கலாசாரம் வேறு; நாகரீகம் வேறு; எங்களையும் ஹிந்துக்களையும் சேர்த்து ஒரே ஜனநாயக ஆட்சி அமைப்பது சரியல்ல; நாடு பிரியவேண்டும்; எங்கள் பிரதேசங்களில் எங்களுடைய ஆட்சியும் ஹிந்து பிரதேசங்களில் ஹிந்துக்களின் ஆட்சியும் அமைய வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக முஸ்லிம்கள் அனைவரும் ஒரே கொடியின் கீழ்திரள வேண்டிய தவசியம்" என இன்னொரு யோசனையும் கூறப்பட்டது.

இந்த வழி சுலபமாகவிருந்தது. இதை மேற்கொள்வதற்கு அறிவு, ஒழுக்கம், தன்னடக்கம் தேவை யென்றிருக்க வில்லை. நீண்ட நாட்களாகவே முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டுவந்த கல்வி, பயிற்சியை உத்தேசித்து முஸ்லிம் மூளைக்கு எட்டக்கூடியதாயுமிருந்தது எனவே ஒரு சிலரைத்தவிர முஸ்லிம்கள் அனைவரும் இதையேற்க முன்வந்தனர். வழியைக் கண்டு பிடித்தவரே தலைமை வகித்தார் தனி சமுதாயக்கிளர்ச்சி ஆரம்பித்தது. தலைவரின் உத்திரவுப்படி எல்லாகாரியங்களும் நடந்தன. ஆகையால் நம் சாதனையிலுள்ள சாதக பாதகங்கள், நம் சமீப கால நடவடிக்கைகள், இன்றைய நிலைமையில் நமக்குள்ள லாப நஷ்டங்கள், அனைத்துக்கும் அவரே ஜவாப்தாரி.

இது ஒரு வகுப்புக்கிளர்ச்சி எனவே பெயராலும் பிறப்பாலும் முஸ்லிம்களாயிருந்தவர்களெல்லாமே இதில் கலந்துகொண்டார்கள். அவர்கள் ஆண்டவனையும், இறுதி நாளையும் நம்புகிறார்களா? திருகுர்ஆனையும் திருநபியையும் கவுரவிக்கிறார்களா? அவர்களுக்கு தக்கது, தகாதது (ஹராம், ஹலால்) என்ற பாகுபாடு உண்டா? தர்மிஷ்டர்களா? ஒழுக்கமுள்ளவர்களா? என்ற கேள்வி முறையேயிருக்க வில்லை. மேலும் சமூக பாதுகாப்பே குறிகோளாக இருந்ததால் சமூகத்தின் எல்லா சக்திகளையும் திரட்டி முன்னணி அமைப்பது அவசியமென்று கருதப்பட்டது. கிளர்ச்சியில் கலந்து கொள்பவர்கள் ஒருபுரமிருக்க தலைமை தாங்கி நடத்தும் தலைவர்கள் விஷயத்தில் கூட இஸ்லாமுக்கும் அவர்களுக்கும் சம்மந்தமுண்டா? இல்லையா? வென்று கவனிக்கப்படவில்லை. இது ஒரு அரசியல் கிளர்ச்சியும் கூட. எனவே நேர்மை பற்றிய பிரச்னையே எழுப்பப்படவில்லை. அரசியல் பித்தலாட்டங்களில் தேர்ந்து விளங்கியவர்கள் பொறுப்பு வாய்ந்த பெரும் பதவிகளுக்கு தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டனர். அரசியல் தகிடுதத்தக்காரர்கள் என்று நிரூபணமாகிவிட்ட பிறகு அவர்கள் நம்பத் தகுந்தவர்களா? இல்லையா? வென்று அலசிப்பார்க்க வேண்டிய அவசியம் உணரப்படவேயில்லை

இந்தக் கிளர்ச்சிக்கும் மதத்துக்கும் சம்பந்தமிருக்கவில்லை. விரும்பியிருந்தால் இதே போன்ற கிளர்ச்சியை உலகத்தின் வேறெந்த மதத்தினரும் செய்திருக்க முடியும். ஆயினும் அகஸ்மாத்தாக இந்தக் கிளர்ச்சிக்காரர்கள் தங்கள் மதத்துக்கு 'இஸ்லாம்' யென்று பெயர் வைத்திருந்தனர். ஆகையால் இஸ்லாமின் சேவைகளும் பெறப்பட்டன. இஸ்லாம் வாய்விட்டுச் சொல்லவா போகின்றது! எனவே தங்கள் நடவடிக்கைகளுக்கெல்லாம் இஸ்லாமின் முத்திரையிடுவதென்றும் அதில் ஒத்துழைக்காத

வர்களுக்கு நரக வழிகாட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கெட்டுப்போன நவாப் ஜாதா ஒருவன் குடும்பத்தின் கிழட்டுப்பணியாளிடம் வேலை வாங்குவதைப் போலவே இஸ்லாமிடமும் வேலைவாங்கப்பட்டது. புத்திமதி கூறவும் ஆலோசனை சொல்லவும் பணியாளுக்கு உரிமையேது! தான் தோன்றித்தனமான செய்கைகளுக்கு பணியாளின் சேவையின் அவசியம் ஏற்படும்போது நவாப் ஜாதா வேலைக்காரனை கூப்பிடுவான். பொறுமையிழந்த பணியாள் நவாப் ஜாதாவின் தவறான போக்கை சுட்டிக்காட்ட வாய்திறப்பானாகில் "வாயை மூடடா கிழட்டுப்பயலே! யோஜனை கூறும் அளவுக்கு தலைதூக்கி விட்டாயா? நம்முடைய காரியங்களில் தலையிட உனக்கென்ன துணிச்சல்? சொன்னதைச் செய்!" என்று அதட்டி வாயை அடக்குவான்.

ஆரம்பத்திலிருந்து கடைசிவரை நம்முடைய கிளர்ச்சிக்கு இதுதான் அடிப்படை. இதில் நேர்மையுள்ளவர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்கள், முதல்தரமான நாஸ்திகர்கள் அனைவருமே இருந்தனர். மதத்தில் ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு துச்சனாக இருந்தானோ அவ்வளவுக் கவ்வளவு முன்னணியில் இடம் பெற்றான். ஆரம்பத்திலிருந்தே ஒழுக்கத்தைப்பற்றி கவலையே இருக்கவில்லை. தொண்டர்கள் முதல் பொறுப்புவாய்ந்த தலைவர்கள் வரை நாணயமற்ற நடத்தையுள்ளவர்களே நிறைந்திருந்தனர். நாட்கள் செல்லச்செல்ல நாணயமற்றவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. பாமர மக்களின் உணர்ச்சிகளை தூண்டிவிடுவதற்காக மட்டும் இஸ்லாம் பிரயோஜனப் படுத்திக்கொள்ளப்பட்டதேயொழிய அனுஷ்டிக்கப் படவேயில்லை ஒரு நாளுக்கேனும் இஸ்லாமுக்கு உத்திரவிடும் அந்தஸ்து அளிக்கப்படவில்லை எந்த ஒரு செய்கையும் இஸ்லாமிய போதனையை அடிப்படையில் கொண்டிருக்கவில்லை.

மேலும் எதிர்ப்பு மனப்பான்மை காரணமாக எதிரிகளின் செய்கைகளுக்கு அதே தோரணையில் பதிலளிப்பது அவசியமென்று கருதப்பட்டது அவர்கள் செய்ததையெல்லாம் முஸ்லிம்களும் செய்தனர். அவர்கள் விழுந்த படுகுழிகளிலெல்லாம் முஸ்லிம்களும் விழுந்தார்கள். இவ்விதம் என்றுமே இழுந்திராத அளவுக்கு முஸ்லிம்கள் ஒழுக்கமிழந்து விட்டார்கள்.

இதுதான் நாம் நடத்திய மாபெரும் போராட்டத்தின் மகத்துவம். இனி பாதுகாப்பு விஷயத்தில் நாம் சாதித்ததையும் சீர்தூக்கிப்பார்ப்போம்.

விகிதாசார அடிப்படையில் இந்தியாவை ஹிந்து முஸ்லிம் கூறுகளாக பிரிக்கவேண்டுமென்று நாம் கோரினோம். நம் கோரிக்கை மூன்று விஷயங்களை கொண்டதாயிருந்தது.

1. கிட்டத்தட்ட சரிபாதி முஸ்லிம்கள் ஹிந்துக்களின் அடிமைகளாகப் போவது.

2. ரஷ்ய எல்லையிலுள்ள போலந்து, செக்கோஸ்லோவேகியாவின் அந்தஸ்துடன் கூடிய ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இரண்டு முஸ்லிம் அங்கங்கள் இந்தியாவின் இருதரப்பிலும் அமைவது.

3 ஆயிரம் மைல் இந்திய பிரதேசத்தை இடையில் கொண்ட இவ்விரு அங்கங்களும் பரஸ்பரம் ஒத்துழைக்க முடியாமலிருப்பது.

பிரிவினை கோரிக்கையை ஹிந்துக்கள் எதிர்ப்பரென்று ஆரம்பத்திலேயே தெரிந்துதானிருந்தது. அதைப்போலவே அவர்களும் எதிர்த்தார்கள். ஒரு தரப்பில் வற்புறுத்தல்; இன்னொரு தரப்பில் எதிர்ப்பு; அதனால் ஏற்பட்ட வெறுப்பு இன்று ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் அல்லது அரபியர்களுக்கும் யூதர்களுக்குமிடையே கூட இல்லையென்றே சொல்ல வேண்டும் நம்முடைய கோரிக்கைப்படியே ஹிந்துக்களிடம் ஒப்படைக்கப்படவிருந்த சரிபாதி சிறுபான்மை முஸ்லிம்களும் இந்தக் கிளர்ச்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மற்றவர்களைவிட அவர்களே முன்னணியில் இருந்ததாகக்கூட சொல்லலாம். எனவே பிரிவினைக்குப் பிறகு அவர்கள் கொடுமை படுத்தப் படுவார்களென்பது தெரிந்தே யிருந்தது. ஐக்கிய மாகாணம், பீஹார் முதலிய இடங்களில் வீடுகளில் பொறிக்கப்பட்டிருந்த 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' கோஷமே பிற்காலத்தில் கொள்ளை, கொலை, பொசுக்கல், கற்பழித்தலுக்கு விடுக்கப்படக்கூடிய அழைப்பாக இருந்து வந்தது. ஒரு சாராரின் போராட்டத்தையும் இன்னொரு சாராரின் வீண் கூச்சலையும் சமமாக எடைபோட்ட சுயநலக்கார மூன்றாவது பேர்வழி அரசியல் தராசை வைத்திருந்த வரை கூச்சல்கள்பலனளித்தன. மூன்றாவது சக்தியின் நம்பிக்கையில் ஊறிப்போயிருந்த நம் தலைவர்களுக்கு அடுத்த கட்டத்தில் என்ன வேண்டியிருக்குமென்று தெரியாமலேயே இருந்தது. திடீரென்று நிலைமை மாறியவுடன் அவர்கள் திக்குமுக்காடியதற்கு அதுதான் காரணம்.

சென்ற ஆண்டு ஆரம்பம்வரை கூட நமக்குள்ளிருந்த பலஹீனங்களை நாம் உணரவில்லை. நம் அரசியலில் அடங்கியிருந்த பலாபலன்களும், நம் போராட்டத்தின் போக்கும் தெரியாமலேயே இருந்தது. கோஷங்களாலும், கூச்சல்களாலும் தூண்டப்பட்ட

உணர்ச்சி மயக்கத்திலே நம் கிளர்ச்சியை பலமான கிளர்ச்சி யென்றும், நம் அரசியலை தீர்க்கதரிசன முள்ள அரசியலென்றும் நினைத்துக்கொண்டிருந்தோம் அன்று நம்முடைய கிளர்ச்சியிலுள்ள குறைகளையும் தலைக்குமேல் வந்துள்ள ஆபத்தையும் சுட்டிக்காட்டியவர்கள் நம் கண்ணுக்கு எதிரிகளாகவே காட்சியளித்தனர். ஆனால் பிரிவினைக்குப்பிறகு நம் ஒழுக்கத்தில், அரசியலில், ஸ்தாபனத்தில் இருந்து வந்த எல்லா குறைகளும் திடீரென்று தன்வேலையைச் செய்யவாரம்பித்தன. சில தினங்களுக்கு முன்வரை தாங்கள் எதிர்த்து நின்ற அதே ஹிந்து சீக்கியர்களின் பிடியில் ஒன்றும் செய்யமுடியாதவர்களாய் சிக்கிக்கொண்டிருப்பதை ஐந்து கோடி முஸ்லிம்கள் உணர்ந்தார்கள். இப்படியாக பத்துகோடி முஸ்லிம்களை பாதுகாக்க ஆரம்பமான கிளர்ச்சி ஐந்து கோடி முஸ்லிம்களை விவரிக்க முடியாத அழிவுப்படுகுழியில் தள்ளி விட்டது. கிழக்கு பஞ்சாப், டில்லி முதலிய பிரதேச முஸ்லிம்கள் திடீரென்று கொடுமைக்கு இலக்கானபோதுதான் தாங்கள் நம்பியிருந்த ஸ்தாபனம் உதவாக்கரை யென்றும் 100-க்கு 95 தலைவர்கள், தொண்டர்கள் நாணயமற்றவர்களென்றும் தெரிந்து கொள்ள முடிந்தது. நெருக்கடியான வேளையில் சமூகத்தை கைவிட்டு தங்களை மாத்திரம் பாதுகாத்துக் கொள்வதில் அவர்கள் ஈடுபட்டார்கள். தங்கள் பாதுகாப்புக்காக முஸ்லிம்கள் சேகரித்து வைத்திருந்த ஆயுதங்களைக் கூட ஹிந்து சீக்கியர்களிடம் அதிக விலைக்கு விற்க அவர்கள் தயங்கவில்லை. அபாயத்துக்குள்ளாகியிருந்த முஸ்லிம்களை வெளியேற்றுவதைவிட தங்கள் கால்நடைகளையும் ஆடம்பரப் பொருள்களையும் வெளியேற்றுவதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். பாகிஸ்தான் சர்க்கார் லாரிகளில் ஏற்றுவதற்கு அகதிகளிடமிருந்து லஞ்சம் வாங்கினர். அகதி முகாம்களில் சோற்றுப்பருக்கைக்கு திண்டாடிக்கொண்டிருந்த அகதிகளுக்காக சர்க்கார்கொடுத்த சப்பாத்திகளையும் அதிக விலைக்கு விற்று பணத்தை கொள்ளையடித்தனர்.

ஒழுக்கம் சம்மந்தப்பட்டவரை முஸ்லிம்கள் காட்டிவந்த அலட்சியத்தால் பாகிஸ்தான் எல்லையின் இருபுறங்களிலும் மோசமான விளைவுகள் வெளியாயின. முஸ்லிம்கள் கிழக்குப்பஞ்சாபில் பெரும் பிரதேசங்களை வெறும் மிரட்டல்களால் காலி செய்து விட்டனர் எத்தனையோ இழிவான சம்பவங்களை கண்கூடாகப் பார்த்துக் கொண்டும் அவர்கள் உயிருடனேயே இருந்தனர் ஒரு சீக்கியனுடைய காலில் ஐம்பது ஐம்பது முஸ்லிம்கள்வரை விழுந்து உயிருக்கு மன்றாடினர். அப்பேற்பட்ட நெருக்கடியான நேரத்தில் கூட முஸ்லிம்களை சுரண்டவும் தேவைப்பொருள்களை சுரண்டவும் தேவைப் பொருள்களை கள்ளமார்க்கெட்டில் விற்கவும் முஸ்லிம்கள் வெட்கப்படவில்லை.

இன்னொருபக்கம் மேற்கு பஞ்சாப் எல்லைப்புரம் சிந்து முஸ்லிம்களும் ஒரு சமயம் முஸ்லிம்களின் கவலையால் உருகிக்கொண்டிருந்த அவர்களுடைய தலைவர்களும் முஸ்லிம்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம். எல். ஏ. க்களும் சர்க்கார் அதிகாரிகளும் ஹிந்து சீக்கியர்களின் சொத்துக்களை கொள்ளையடித்து தங்களுடைய வீடுகளை நிரப்பியதையும் முஸ்லிம் அகதிகள் குடியேற்றவிஷயத்தில் முட்டுக் கட்டைகள் போட்டதையும் தீன்புற்று வந்திருந்த முஸ்லிம்களை ஈவிரக்கமற்றமுறையில் நடத்தியதையும் பாகிஸ்தான் ஏற்பட்டவுடன் தலைவிரித்தாடிய லஞ்சம், சுரண்டல், அக்ரமம், அநியாயம், பாரபட்சம், பொறுப்பின்மை, தான்தோன்றித்தனத்தையும் பார்த்தபிறகு நேர்மை, ஒழுக்கமின்றி, வெறுங்கோஷங்கள், கொடிகள் ஊர்வலங்களால் ஒரு சமூகத்தை தூண்டிவிடுவதன் பலாபலன்கள் என்னவாயிருக்கு மென்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

கதை பூராவிலும், காப்பாற்றப்பட்ட பாதி முஸ்லிம்களின் பேரு ஆட்சியொன்று அமைந்ததைத்தவிர லாபக் 'கட்டத்'தில் வைப்பதற்கு வேறொன்றுமில்லை. மகத்தான இந்த சாதனையில்கூட தவறுகள் நிறைந்திருக்கிறது. அதன் மோசமான விளைவுகளை அனுபவிக்கிறோம். பிரிவினைப்பிரச்னை தீர்க்கப்பட்ட விதமே முட்டாள்தனமானது. பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதைவிட்டு எல்லைநிர்ணயவிஷயம் கமிஷன்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதிமுடிவுசெய்யும் அதிகாரம் பூரணமாக தலைவருக்கு அளிக்கப்பட்டது. இந்தியா சம்மந்தப்பட்டவரை தலைவர் சுயநலமற்ற நடுநிலைமை வகிப்பவரா யிருக்கவில்லை. அத்துடன் இந்திய கவர்னர் ஜெனரலாகவிருக்கப்போகும் நபரிடமே முடிவை வெளியிடும் அதிகாரமும் விடப்பட்டது. அந்தமுடிவின் மூலம் நிர்ணயிக்கப்படும் எல்லைகளை ஆட்சேபனையின்றி ஏற்றுக்கொள்வதாய் நம் மாபெரும் தலைவரும் ஒப்புக்கொண்டிருந்தார். அதனால் வங்காளத்திலும் பஞ்சாபிலும் அநேக முஸ்லிம்கள் மெஜாரிடி பிரதேசங்கள் இணைக்கப்பட்டு விட்டன. கிழக்கு பஞ்சாபில் ஒன்பது முஸ்லிம் பெரும்பான்மை தஸீல்கள் ஹிந்து சீக்கியர்களின் ஆதிக்கத்தில் மாறின. போதாக்குறைக்கு குர்தாஸ்பூர் ஜில்லா இந்தியாவுக்கு தாரைவார்க்கப்பட்டது. அதனால் காஷ்மீரிலுள்ள ஹிந்து முதலாளிகள் இந்தியாவுடன் தொடர்பு கொள்ள வழிகிடைத்துவிட்டது.

லார்ட் மவுண்ட்பேட்டன் அதிகாரமாற்ற விஷயத்தில் அனுசரித்தமுறை பாகிஸ்தானுக்கு பாதகமாக இருந்தது. இருப்பினும் நம் ஒப்பற்ற தலைவர் அதை

வால் நக்ஷத்திரம். ★

—(நாகை மௌலானா முஹம்மது சாலீஹ் சாஹிப்)—

இவர் 1926-ல் "கிரணவிதி" என்ற பெயருடன் ஓர் சிறிய புத்தகம் வெளியிட்டிருக்கிறார். அதிலேயே வால் நக்ஷத்திர விஷயமாயும் தம் புதிய கருத்தை வெளியிட்டிருக்கிறார். இப்புத்தகத்தின் அடிப்படையான மற்றொரு விஷயம் இன்னும் முக்கியமானதாயிருக்கிறது. அதாவது,

சூரியனின் உஷ்ணம் பூமியை அடுத்து அதிகமாயிருப்பதற்கும் மேலே போகப்போக குறைவாயிருப்பதற்கும் வானாராய்ச்சியாளர்கள்கூறும்கருத்துக்களைப் பல அத்தாட்சிகளுடன் மறுத்து தம்முடைய சொந்த ஆராய்ச்சியால் கண்டுள்ள "சூரியனிலிருந்து நெருக்கமாய் ஆரம்பித்து வர வர பரவலாயுள்ள விரிகதிரொளிகளானது உருண்டை வடிவ பூகோளத்தைச் சூழ்ந்துள்ள வாயு மண்டலத்துள் பிரவேசிக்கும்போது அவ்வாயுமண்டலத்தின் மேன்பரப்பு வளைவுற்றிருக்கும் காரணத்தால் (லென்ஸ் விதிப்படி) அங்கிருந்து மீண்டும் குவிசதிராகி வருவதால்தான் இயற்கையாகவே மேற்படி வாயுமண்டலத்தின் மேல்பாகம் உஷ்ணம் குறைவாகவும் கீழே வரவர உஷ்ணம் அதிகமாயும் இருக்கிறதென்று" ஸ்தாபித்திருக்கிறார் இதைப் பல பெரிய மனிதர்களும் ஒத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நாமும் இதை தமிழ் நாட்டின் தனித் தமிழ் மகன் கண்டுள்ள இவ்விஷயங்களைத் தக்கபடி ஆராய்ந்து நாட்டின் பெருமையை மேலோங்கச் செய்வது சர்க்காருடையவும், பத்திரிகைகளுடையவும் கல்வி முன்னேற்ற ஆர்வமுடைய எல்லோருடையவும் கடமையெனக் கருதுகிறோம். —ஆசிரியர்

இந்நவம்பர் 7உ முதல் வால் நக்ஷத்திரம் ஒன்று காணப்பட்டு வருகிறது. இதன் தோற்றம், இடம், வாலின் நீளம் இவைகளைப் பற்றியெல்லாம் பல பாகங்

அப்படியே ஒப்புக்கொண்டார் பாகிஸ்தான் படைகள் பலவிடங்களில் சிதறிக்கிடந்தன. அதன் சாதனங்களும் ராணுவசேமிப்புகளும் இந்தியாவின் ஆதிக்கத்தில் இருந்தன. அதற்குச் சேரவேண்டிய மூலதனமும் இந்தியாவிடமேயிருந்தது அதன் ஆபீஸ்களும் சிப்பந்திகளும் பூர்த்தியாக மாற்றப்படாமலிருந்தபோதே பூரணநிர்வாக பாதுகாப்பு பொறுப்புகளுடன் பாகிஸ்தான் ஆட்சி அமைக்கப் பட்டுவிட்டது. அதன்பயனாக காப்பாற்றப்பட்ட பாதி முஸ்லிம்கள் கூட இதுவரை இந்தியாவின் பிடியிலிருந்து பூரணமாய் விடுபடாமலேயே இருந்துவருகின்றனர்.........

....

நாம் சம்மதிக்காம லிருந்தும் லார்ட் மவுண்ட் பேட்டன் இப்படிச்செய்து விட்டாரென்று ஒரு வருஷத்துக்குப் பிறகு இன்று சொல்லப்படுகிறது. லார்ட் மவுண்ட் பேட்டன் நம் அழிவுக்கு அடிகோலிக்கொண்டிருந்தபோது உங்கள் வாய் எங்கேபோயிருந்தது? முஸ்லிம்களுக்கும் உலகுக்கும் விஷமம் நடப்பதை நீங்கள் ஏன் எடுத்துக்காட்டவில்லை? முஸ்லிம்களுக்கு நாசம் விளைவிக்கும் விஷயங்களை நீங்கள் பேசாமல் ஏற்றுக்கொண்டதற்குக் காரணமென்ன? தன்னிச்சையாக லார்ட் மவுண்ட் பேட்டன் செய்யும் காரியங்கள் எங்களைக் கட்டுப்படுத்தாதென்று ஏன் அறிவிக்கவில்லை? அப்பொழுது நீங்கள் பேசாமலிருந்தது மட்டுமின்றி தவறான பிரிவினையால் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் அழிய நேரிட்டபோதுகூட உங்கள் நிலைமையை தெளிவுபடுத்த வேண்டிய அவசியத்தை நீங்களே உணரவில்லை.

ஹிந்துக்களின் ஆதிக்கத்திலிருந்து தங்களை எப்படி பாதுகாத்துக் கொள்வதென்ற பிரச்னை பத்து வருஷங்களுக்கு முன்பே முஸ்லிம்களை எதிர்நோக்கியிருந்தது இஸ்லாமிய போதனைகள், இஸ்லாமிய ஒழுக்கத்தின் சக்தியால் அபாயத்தை தவிர்க்கலாமென்று ஒரு யோசனை கூறப்பட்டது. ஆனால் முஸ்லிம்கள் அதை ஏற்க தயாராயிருக்கவில்லை. தனிசமுதாய அடிப்படையில் அரசியல் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்ட யோசனையை முஸ்லிம்கள் ஏற்றார்கள். தங்களுடைய எல்லாவித சக்திகளையும் சாதனங்களையும் தனிசமுதாயக் கிளர்ச்சியின் சிருஷ்டி கர்த்தாவிடம் ஒப்படைத்தார்கள். இன்று பத்து வருஷங்களின் கதையும் நம் தலைவர் பிரச்னையைத்தீர்த்த விதமும் நம்முன் இருக்கின்றது. நம் பிரச்னையை அவர் எப்படித்தீர்த்தா ரென்பதையும் நாம் பார்த்துவிட்டோம். நடந்தது நடந்து விட்டது. அதை இனி மாற்றமுடியாது இப்படி நடக்காமலிருந்தால் எப்படி இருந்திருக்கும் என்ற சர்ச்சையால் பிரயோஜனமில்லை. இன்று நம்மை எதிர்நோக்கும் அநேக முக்கிய பிரச்னைகளைத் தீர்ப்பதிலும் அதே தலைமையை நம்பலாமா என்பதுதான் பிரச்னை. இதுவரை நடந்தகாரியங்கள் மீண்டும் அதே தலைமையில் இருக்க சிபார்சு செய்யுமா? தலைமை செய்ததவறுகளால் நம் தலைமீது விழுந்திருக்கும் இடுக்கண்களை அகற்றுவதில் அதே தலைமையிடம் நம்பிக்கை வைக்க முடியுமா?

களிலிருந்தும் பத்திரிகைகள் மூலம் பிரஸ்தாபிக்கப் பட்டு வருகிறது.

வால் நக்ஷத்திரங்கள் யாவை? அவை எத்தனை இருக்கின்றன? எங்கிருக்கின்றன? எப்போது தோற்றமாகின்றன? என்ற சர்ச்சைகளெல்லாம் இது சமயம் எழுதுவது சகஜம். எனவே என்னுடைய அபிப்பிராயத்தையும் வெளியிடுவது மிகவும் பொருந்தும்.

வானசாஸ்திர வட்டாரத்தில் இதைப் பற்றி நிச்சயமற்ற பல அபிப்பிராயங்கள் பரிமாறப்படு கின்றன. (Comet) காமெட் என்னும் ஓர் வால் நக்ஷத்திரம் இருப்பதாகவும் அது ஓர் குறிப்பிட்ட வழியில் சலனமாகிக் கொண்டிருப்பதாகவும் அதன் கோளத்திலுள்ள எரிமலையின் ஜுவாலைதான் வாலின் தோற்றம் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் அப்படி எத்தனை முறை எந்தெந்தக் காலத்தில் தோன்றியிருக்கிறதென்பதற்கு சரியான ஆதாரம் இல்லை.

1910-வது வருஷத்தில் காணப்பட்ட மிகப் பெரிய வால் நக்ஷத்திரம் அதே காமெட்தான் என் பதும் சொல்லப்படவில்லை. பின்னர் பல வால் நக்ஷத் திரங்கள் பல இடங்களில் காணப்பட்டதாக பத் திரிகைகளில் வெளியானதுண்டு இவற்றின் வால் தோற்றங்கள் பலவிதமாயும், எல்லாம் மிகக் குறுகிய காலத்தில் மறைந்துவிட்டவைகளாயும் இருக்கின் றன. மேலும் இவையனைத்தும் சாதாரணமாகவோ அல்லது தூரதிருஷ்டிக் கருவிகள் மூலமாகவோ எதிர் பாராத வகையில் காணப்பட்டவை. இவை ஒவ் வொன்றும் புதியவை ஆனால் எதற்கும் வால் சதா இருந்துகொண்டிருக்கவில்லை

இதற்கிடையில் எத்தனையோ முறை வான சாஸ்திர நிபுணர்கள் வால் நக்ஷத்திரம் வரப்போகிற தென்ற ஹேஷ்யங்கள் வெளியிட்டுள்ளனர். ஆனால் இவர்களின் முன்னறிக்கை எதுவுமே மெய்யாக வில்லை. அதற்கு வால் நக்ஷத்திரம் பற்றிய தவறான கொள்கைகளே காரணம்.

வால் நக்ஷத்திரம் என்றால் என்ன?

வால் நக்ஷத்திரம் எதுவும் இயற்கையாக வாலுடன் இருந்துவருகிறதென்பது தவறு. நக்ஷத் திரங்கள் யாவும் சுயமாகவும் சந்திரனைப்போன்று இர வலாகவும் பிரகாசிக்கும் பல கோளங்களாகும். இன்னும் ஒவ்வொரு கோளங்களிலும் சுற்றியுள்ள மற்றவைகளின் தோற்றங்களைப் பிரதிபலிக்கும் காரணத்தால் அநேக மின்மினி வெள்ளிகளும் தோற்றமாகின்றன. இவற்றில் ஏதாவதொன்றுக்கு ஸ்தல வேறுபாடு அல்லது ஒன்றோடொன்று நேர் பட்டு கிரகணமாகும் சமயம், தவிர இது போன்ற இன்னும் பல காரணங்களால் (ஷேட் (Shade) என்னும்) ஒரு வகை மாறுதலான சுடர் ஏற்படுகிறது. இதுதான் வால்.

இந்த வால் விசிறி போன்றும், சாதாரண நீண்ட பிரகாசமாயும், சில நீண்ட மயிரிழைகள் போன்றும் பல விதமாயும் பல நாட்கள், பல மணிகள், பல நிமிஷங்கள் அல்லது பல வினாடிகள் தோன்றி மறையும்.

இப்போது காணப்படும் நக்ஷத்திரம் சில காலத் திற்கு முன் சுக்கிரன் மேற்திசையில் தோற்றமாகிக் கொண்டிருக்கும்போது மேற்கில் காணப்பட்ட வால் நக்ஷத்திரமாக இருக்கலாம் என்று கொள்வதற்குக் காரணமிருக்கிறது. இது சுக்கிர மண்டலத்தைச் சார்ந்த ஓர் சார்பு கிரகமாயிருக்கலாம். அப்போது மேலிருந்து கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருந்தால் சீக்கிரம் மறைந்துவிட்டது. இப்போது கீழிருந்து மேல் நோக்கி வந்துகொண்டிருப்பதால் இதன் வால் தோற்ற நிலை பெயரும்வரை இன்னும் ஒன்றிரண்டு வாரங்கள் நீடித்திருக்கலாம். வாலின் நீளம் அதி கரித்துக்கொண்டே போய் பின்னர் மீண்டும் நாளடை வில் குறைந்து வந்து மறைந்துவிடும். திடீரென்று மறைந்துவிடவும் காரணமுண்டு.

இது சூரியனுடைய பிரதிபிம்பந்தானென்று தெரிகிறது. இதன் வால் சூரியனிலிருக்கும் திசைக்கு நேராக கீழிருந்து மேல் நோக்கிச் செல்வது இதற்குச் சரியான காரணமாகும். இது இன்னும் எத்தனை டிக்ரிகள் நகர்ந்து வந்தாலும் இந்த வால் சூரியனுக்கு நேராகவும் தலையாகிய நக்ஷத்திரம் சூரியனை முன் நோக்கியும் இருப்பதைக் காணலாம். பெரும்பாலும் வால் நக்ஷத்திரங்கள் இம்முறையில்தான் இருக்கும்.

1910-ல் காணப்பட்ட வால் நக்ஷத்திரமும் இது போலவே ஆரம்பித்துக் கடைசியில் அதன் வால் நூலிழைகள் போன்ற நல்ல பிரகாசத்துடன் கிழக்கு மேற்காய் சுமார் 135 டிக்ரி தூரம் நீண்டு காணப் பட்டது. இதுவும் அப்படியே ஆகலாம் அல்லது அது வாகவே இருக்கலாம். எப்படியானாலும் இந்த வால் இயற்கையாக எந்த நக்ஷத்திரத்திற்கும் உண்டா யிருக்கவில்லை என்பது மட்டும் நிச்சயம்

உங்கள் வியாபாரம் விருத்தியடைய

ஆஸாதில்

விளம்பரம் செய்யுங்கள்.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 15—11—'48 திங்கட்கிழமை { இதழ் 40

தனிப் பெரும் தலைவர்.

நவம்பர் 14 பண்டித நேரு பிறந்தநாள் இந்திய விடுதலைப்போரி முன்னணிவீரர், மஹாத்மாஜீயின் ஆத்மபுத்திரர், சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர், கடமையை வாழ்க்கையாகக் கொண்ட கர்மவீரர் பண்டித ஜவஹர் பிறந்ததினத்தை உலகெங்கும் இந்தியர்கள் சிறப்பாகக் கொண்டாடினர். உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. அடிமை இந்தியாவில் இந்தியத் தலைவனாய் விளங்கிய பண்டித நேரு விடுதலைக்குப் பிறகு உலகத் தலைவனாய் சிறந்து விளங்குகிறார். அடிமை இந்தியாவுக்கு பண்டித நேரு செய்திருக்கும் சேவை மஹத்தானது. பணக்காரக் குடும்பத்தில் பிறந்து பாட்டாளித் தோழனாக வாழ்ந்தார். பன்முறை சிறைபுகுந்தார். அண்ணல் பாபூஜியின் வழிநின்று அவர்செய்த தியாகங்களை அளவிடமுடியாது. அடிமைநீங்கி அண்ணலின் ஆசியுடன் முதலமைச்சராய் வந்தபிறகு அவர் செய்துவரும் சேவைக்கு இந்தியர்களால் கைம்மாறு செய்யமுடியாது. விடுதலையுடன் வெட்டப்பட்டு வெம்புயலில் சிக்கிய இந்தியாவை காப்பாற்றினார். கடந்த 15 மாதங்களில் சுதந்திர இந்தியாவில் அவர் செய்த சேவை சுதந்திர இந்திய சரித்திரத்தில் மிகமுக்கிய ஸ்தானம் பெற்றுவிட்டது. வகுப்பு வேற்றுமையை வேரறுத்தார். வர்க்கப்போராட்ட சீர்கேட்டைத் தடுத்தார். இந்தியாவை அகதிகள் பிரச்னையின் பயங்கரத்திலிருந்து மீட்டினார். ஹைதராபாத் பிரச்னையை நிதானத்துடன் சாதித்தார். மொழிவேற்றுமை, மாகாணபித்து, சமஸ்தான ஐக்கியம் முதலிய எல்லாப்பிரச்னைகளையும் தீர்த்துவைத்த பெருமை நேரு சர்க்கார் அடைந்திருக்கிறது. எத்தனையோ கஷ்டங்களுக்கிடையே காஷ்மீரில் படையெடுத்து வந்த குண்டர்களை விரட்டியடித்து வருவது நேருசர்க்காரின் மகத்தானசாதனையாகும். உள்நாட்டுப் பிரச்னைகளை வெற்றிகரமாக சமாளித்தது மட்டுமின்றி சர்வதேச அரங்கத்திலும் இந்தியாவின் அந்தஸ்தை பண்டிதநேரு உயர்த்தியிருக்கிறார். உலகம் இன்று காந்திஜியின் இந்தியாவையும் ஆத்ம புத்திரனையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது. உலக சமாதானத்தை நிலை நிறுத்த இந்தியாவாலும் இந்தியப் பிரதமமந்திரி பண்டித நேருவாலும் தான் முடியுமென்று நம்புகிறது. இந்தியா அடைந்துள்ள உயரிய ஸ்தானத்துக்கு பாபுஜியின் அன்புக்குப் பாத்திரமான பண்டித நேருவின் நேர்மை, திறமை, தீர்க்கதரிசனமே காரணம். ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்திலே அவர் நிகழ்த்திய சரித்திர பிரசித்தி பெற்ற பிரசங்கம் இந்தியாவுக்கு தனிப்பெரும் பெருமையாகும். அஹிம்சையால் அன்னிய ஆதிக்கத்தை அகற்றிய இந்தியா அணுகுண்டைக்கண்டு அஞ்சப்போவதில்லையென்று பண்டித நேரு பட்ட வர்த்தனமாகப் பேசியது இந்தியப்பண்பாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ஐரோப்பிய நாடுகள் மட்டுமே உலகமென்று நிலவிவரும் எண்ணத்தை கண்டித்து ஆசிய நாடுகளின் விடுதலை யெழுச்சியை எடுத்துக்காட்டி மேல் நாடுகளை எச்சரித்த ஆசியாவின் தனிப் பெரும் தலைவரான பண்டிதநேரு தன் லட்சியத்தில் பூரண வெற்றியடைவாரென்று 'ஆஸாத்' நம்புகின்றது இந்தியாவின் அருந்தவப்புதல்வர், பேரறிஞர், பெருமைப்படத்தக்க நம்தலைவர், இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு பல்லாண்டு வாழ்ந்து பாபூஜி கனவு கண்ட இந்தியாவை உருவாக்கி உலக சமாதானத்தை நிலை நாட்டுவதில் வெற்றியடைய தமிழகத்தின் சார்பில் 'ஆஸாத்' பிரார்த்திக்கின்றது. ஆஸாதின் மனப்பூர்வமான வாழ்த்துக்கள் அவருக்கு உரித்தாகுக.

வாழ்க ஜவஹர்லால்நேரு!

வாழ்க காந்தியம்!!

வாழ்க இந்தியா!!!

வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்ற, சமுதாயம், ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.

சமூக வாழ்வு

தீண்டப் படாதவர்க ளென்பவர்கள் கூடத் தங்களுடைய விதியைக் கடு கடுப்பும் வெறுப்பு மின்றி ஏற்று வந்திருக்கிறார்கள். நான் மேலே கூறியது ஹிந்துக்களிலுள்ள பொது மக்களைக் குறிக்குமே யல்லாது தற்காலப் படிப்புள்ளவர் களுக்குப் பொருந்தாது. பிரம சமாஜம், ஆரிய சமாஜம் போன்ற சீர்திருத்த இயக்கச் சார்புள்ளவர் களுக்கும் அல்லது மஹாத்மா காந்தியின் சமன் செய்யும் சக்தி வசமானவர்களுக்கும் பொருந்தாது. படித்த அல்லது சீர்திருந்திய இவர்கள் அநேகமாய் இந்தத் தடைகளை விட்டுவிட்டார்கள், அல்லது தங்கள் வாழ்வில் விலக்கிவிட்டார்கள். அவைகளைப் பழக்கத் தில் வைத்திருப்பவர்களும் அவைகளைச் சிறந்த அறி வுடைமை என்று கருதவில்லை.

ஹிந்துக்களோடு நெருங்கிப் பழகி அவர்களு டைய சாதி முறைச் சமூக அமைப்பைத் தெரிந்து கொண்ட முஸல்மான்கள் இந்தத் தடைகளை நேசப் பான்மையில் உணரத் தவறியதில்லை; வெறுத்தது மில்லை ஹிந்துக்களில் இவை ஏற்றத் தாழ்வைக் குறிக்கவில்லை; தொன்றுதொட்ட வழக்கம். அப்படித் தான் ஹிந்துக்களும் அதை எடுத்துக்கொள்கிறார்கள் என்று அவர்கள் நன்கறிவார்கள். ஆகையால் அழைக்கப்பட்டபோது ஹிந்துக்களுடைய வீட்டு விசேஷங்களான திருமணம், பிறந்தநாட்கொண் டாட்டங்களில் அவர்கள் தாராளமாகக் கலந்து கொண்டார்கள்; தங்கள் வீட்டு விசேஷங்களுக்கும் ஹிந்துக்களை அழைத்திருக்கிறார்கள். மனம் விட்டுப் பிரியமாக உறவாடுவதற்கு உணவு விஷயம் குறுக்கே நிற்கவில்லை. ஹிந்து தன்னுடைய ஜாதியாசாரத்தைக் கைவிடாமல் முஸ்லிம் நண்பர்களுக்கு விருந்தளித்திருக் கிறான். ஹிந்து ஜாதியாசாரத்திற்குக் கேடு வாராதபடி முஸ்லிமும் அவர்களுக்கு விருந்தளித்திருக்கிறான் முன்போல இங்கும் நான் சொல்வது, குயுக்தியறியாத சாதாரண முஸல்மானுக்குப் பொருந்துமே தவிர இக் காலத்திய படிப்புள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் பொருந்தாது. நான் மேலே கூறியவை ஜாதிமுறை யைச் சரியென்று கூறுவதற்குமல்ல; அல்லது அதைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்பதற்குமல்ல. உள்ள நடப்பை உள்ளபடி கூறியிருக்கிறேன். காலம் மாறிவிட்டது. அத்துடன் நோக்கங்களும் மனப் போக்குகளும் மாறிவிட்டன. இப்பாகுபாடுகளினும் வேறுபாடுகளினும் எவ்வளவு அதிகத்தைச் சீக்கிரம் ஒழிக்க முடியுமா அவ்வளவைச்சீக்கிரத்தில் ஒழிப்பது விரும்பத்தகுந்ததென்றாலும் அதுவும் ஹிந்து முஸ்லிம்களில் பெரும்பாலோர் அவைகளை வெறுக்க ஆரம்பித்த இக்காலத்தில் இவைகளை முற்காலத்திலோ அல்லது தற்காலத்திலோ இவ்விரு வகுப்பாருக்கு மிடையே இணக்கம், நல்லெண்ணம், நட்புணர்ச்சி ஏற்படுவதற்கு இடையூறுகளாக இருந்தன என்றும் பிரமாதப்படுத்துவது தவறு.

முஸ்லிம்கள் மிகுந்துள்ள மாகாணங்களிலா யினும் சரி, ஹிந்துக்கள் மிகுந்துள்ள மாகாணங்களி லாயினும் சரி, எண்ணற்ற கிராமங்களில் ஹிந்து முஸ்லிம் இரு சாராரும் வாழ்கிறார்கள். எந்தக் கிரா மத்திலும் அவர்களிடையே உண்மையான நட்பும் அளவளாவுதலும் நிலவுவதைக் காண்பது சாதாரண அனுபவம். ஹிந்து தனக்கு அண்டையிலிருக்கிற முஸ்லிமை பாயி, சாச்சா, காக்கா என்று ஏதாவ தொரு முறை வைத்துக்கூசாமல் கூப்பிடுவதையும் அவ்வாறே ஒரு முஸ்லிம் தனக்கடுத்தவீட்டு ஹிந்துவை அழைப்பதையும் காண்கிறோம். உண்மையாக இரு வகுப்பாரைச் சேர்ந்தவர்களுக்கும் பொதுவான அநேகம் பெயர்கள் இருக்கின்றன. சமூகத்தில் தாழ்ந்தபடியில் உள்ளவர்களில் இது அதிகம். ஹிந்துப் பெயர்களை முஸ்லிம்கள் வைத்து வழங்குவதுண்டு. முஸ்லிம் பெயர்களையும் ஹிந்துக்கள் வைத்துக்கொள் கிறார்கள். பட்டம் பதவி, அலுவல்களைக் குறிக்கும் பெயர்களன்றி மனிதர்களின் சொந்தப் பெயர்களின் விஷயத்திலும் இது உண்மையாகும். மனிதர்களுக்கு மனிதர்களுக்கு மட்டுமின்றிக் கிராமங்கள், நகரங்கள், குளங்கள் இன்னும் வேறென்னென்ன பொருள் களுக்குப் பெயர் சூட்டலாமோ அவையத்தனையும், ஒன்று, ஹிந்துப் பெயர் அல்லது முஸ்லிம் பெயர் அல்லது இதுபாதி அது பாதியாகக்கொண்டு விளங்கு கின்றன. அந்த இடங்களில் குடியிருப்பது அல்லது அவைகளுக்குச் சொந்தக்காராயிருப்பது ஹிந்துக் களா முஸ்லிம்களா அல்லது இருவருமா என்பதற்கும் அவைகளின் பெயர்களுக்கும் சம்பந்தமில்லை.

ஆதிகாலக் கிராம வாழ்க்கை மெதுவாகச் சித றுண்டு வருகிறது. பீஹாரில் ஒரு கிராமத்தில் வளர்ந்து அதனுடன் கொண்டுள்ள பிடிப்புகளை அறுத்துக்கொள்ளாத நான், அங்கிருந்த பொது வாழ்வை விளக்கிக் கூறுகிறேன். நான் வாலிபனாக இருந்தபோது இத்தகைய நிலைமை இருந்தது; இப் பொழுதும் அது மறைந்துவிடவில்லை. ஒவ்வொரு கிராமமும் அநேக விஷயங்களில் கிட்டத்தட்டச் சுயதேவையைப் பூர்த்தி செய்வதாக இருந்தது. அதற்கு வேண்டிய சாகுபடி நிலம், மேய்ச்சல் தரை, வேலையாட்கள் தொழிலாளிகள், சகலவிதமான அந்த ஸ்தும், அலுவலுமுள்ளவர்கள் எல்லோரும் அங்கிருப்

பார்கள். இவ்விதமாக சரியானதொரு கிராமத்தில் உழவர்கள், பாட்டாளிகள், ஜமீந்தார்கள், பிராமணர்கள், அநேக இடங்களில் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் அத்தனைபேரையும் காணலாம் ஒவ்வொரு கிராமத்திலும் அதற்கேற்பட்ட தச்சன், கொல்லன், நாவிதன், வண்ணான், குயவன். வளையற்காரன், பொரி செய்பவன், செக்கான் இருப்பார்கள். அங்கே தோட்டி, சாமார், தோபி முதலியோரும் இருப்பார்கள். கிராமத்தின் சமூக, பொருளாதர வாழ்வில் இவர்களால் பயனுண்டு. அறுவடைக்காலத்தில் உழவர்கள் இவர்களுக்குத் தானியமளிப்பார்கள் வீடுகளில் ஏற்படும் பேறுகாலம், திருமணம், இழவு முதலிய விசேஷங்களில் இவர்களில பெரும்பாலாருக்கு, ஏற்பட்ட ஊழியம் உண்டு. அந்தந்த வீட்டாரின் அந்தஸ்து நிலைமைக்குத் தக்கப்படி இவர்கள் ஊதியம் பெறுவதண்டு. இந்த வேலைக்காரர்களிற் பலர் முஸ்லிம்களாக இருப்பார்கள், இருப்பினும் ஹிந்துத்தொழிலாளிகள் போல வேலையைச்செய்து ஊதியம் பெறுவார்கள். உதாரணமாக, ஹிந்துக்கேர்களின் வீட்டு விசேஷங்களில் நாவிதன் முக்கியமானவழி. பிறந்த முடியெடுப்பதில் இவனே முக்கிய காரியஸ்தன். ஹிந்துக்களில் உயர்தர வகுப்பார் பூனூல் போடுவதும் இந்த சந்தர்ப்பத்தில்தான். கல்யாண சந்தர்ப்பத்திலும் இன்னும் அநேகமாய் எல்லாச்சடங்குகளிலும் இவனுக்கு ஏதாவது அலுவலிருந்தே தீரும். கருமாதி காரியங்களிலும் எல்லா வகுப்பு ஹிந்துக்களிடையேயும் முடியெடுப்பது முக்கிய காரியம். சிரார்த்த காலத்திலும் அவனுக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. ஹிந்து நாவிதன் இல்லாத கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. பிண்டமும் தண்ணீரும் அளிப்பது தவிர மற்ற எல்லாக் காரியங்களையும் முஸ்லிம் நாவிதனே செய்கிறான். தனது வழக்கத்திற்கும் மதத்திற்கும் விரோதமென்று சோல்லி முஸ்லிம் நாவிதனுடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்ள ஹிந்து மறுப்பதில்லை, முஸ்லிம் நாவிதனும் கிட்டத்தட்ட மதச் சார்பான இவ்வூழியங்களைச் செய்ய மறுப்பதில்லை. இஸ்லாமின் கண்டிப்பான சட்டங்களுக்கு இது வெறுக்கத்தக்கதாக இருக்கலாம். ஹிந்துக்களிடையே ஒவ்வொரு வாழ்வரசியும் வளையலணிந்து கொள்வது இன்றியமையாததெனக்கருதப்படுகிறது கல்யாணசந்தர்ப்பத்திலும், இதர நன்மை நடக்கும் போதும் அல்லது சாதாரண நாட்டிலும் வளையல் போடவருவது எப்பொழுதும் முஸ்லிம்களே. ஹிந்துக்களில் பர்தாவைக் கண்டிப்பாக அனுஷ்டிக்கிற வீடுகளுக்கு முஸ்லிம் பெண்கள் வளையல் போடச் சொல்ல அனுமதி உண்டு. இதைப்போலவே வண்ணான் அல்லது தோட்டி, ஓர் ஹிந்து அல்லது முஸ்லிமாகவே இருக்கக் கூடும். இருந்தாலும், தான் ஹிந்து அல்லது முஸ்லிம் என்பதைக்க கருதாது சாதாரணத்தினசரி வேலைகளையும், விசேஷநாள் காரியங்களையும் அவன் செய்துவிடுகிறான். இன்னொரு ஜாதி, மாலிகள்; இவர்கள் திறமை வாய்ந்த பூந்தோட்டக் காரர்கள்; விசேஷங்களுக்கு மாத்திரம் பூக்கள் அளிப்பதில்லை. தினசரிப் பூசைக்கும், மதானுஷ்டான காரியங்களுக்கும் அவர்கள் மலர்கள் அளிக்க வேண்டும். மாலியும் தான் ஹிந்து அல்லது முஸ்லிம் என்பதைக் கருதாது இக்காரியத்தைச் செய்கின்றான் தன்னுடைய தெய்வத்திற்குச் சாத்துவதற்கு முஸ்லிம் அளித்த மலரை ஹிந்து வாங்க மறுப்பத்தில்லை. கோயிலிலோ அல்லது விசேஷங்களிலோ விக்கிரகத்திற்கு மலர் அளிக்க முஸ்லிம் மாலியும் மறுப்பதில்லை இவ்வாறு இவைகளெல்லாம் நூற்றுக்கணக்கான வருஷங்களாக நடந்து வந்திருக்கின்றன; இரு வகுப்பாரின் நெருங்கிய தொடர்பு காரணமாகவே இப்படி ஆகியிருக்க வேண்டும்.

உடை.

உடையென்பது மற்றக் காரணங்களைக் காட்டிலும் அணிகிறவர்கள் வசிக்குமிடத்தின் சீதோஷ்ணத்தைப் பொறுத்தே அமைகிறது. ஆகவே இந்தியாவில் மாகாணத்துக்கு மாகாணம் உடை வேறுபடுகிறதென்பதில் ஆச்சரியமில்லை. அணிகிறவர்களின் வருவாயைப் பொறுத்தும் உடை அதிகமாக வித்தியாசப்படும். சமூகத்தில் கீழ்ப்படியிலுள்ளவர்களுக்குள்ளும் ஏழைகளுக்குள்ளும் அதிக வித்தியாசம் கிடையாது. சமூகத்தில் உயர்படியில் உள்ளவர்களுக்குள்ளும் கிட்டத்தட்ட அதேமாதிரிதான். அதிகவேறுபாடு கிடையாது. உண்மையில் வித்தியாசம் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குப்தான் பண்டித மோதிலால்நேரு, சர்தேஜ் பகதூர் சப்ரு, டாக்டர் சச்சிதானந்த சின்ஹா, பண்டித ஜவாஹர்லால் நேரு அல்லது பீஹார் மாகாண ஹிந்து மஹாசபைத்தலைவர் குமார கங்காநாத சின்ஹா, முஸ்லிம் லீகின் மின்னொளிகளான நவாப் மஹம்மது இஸ்மாயில், சௌதுரி கலிக்குஸ்மான் சர் அலி இமாம், அல்லது காய்தே ஆஜம் ஜின்னா இவர்களிடையே வெளி நாட்டான் யாரும் இந்திய உடையில் யாதொரு வித்தியாசமும் இலேசில் கண்டுகொள்ள முடியாது அதேபோலச் சீக்கியர்களான சர்தார் சார்துல் சிங் கவீஷர் அல்லது சர்தார் மங்கள சிங்குக்கும் மௌலானா ஸாபர் அலி அல்லது மௌலானா அபுல்கலாம் ஆஸாதுக்கும் தலைப்பாகையில் தவிர வேறு எவ்வகை வித்தியாசமும் அவன் காணமுடியாது. அவன் பீஹாரிலோ, வங்காளத்திலோ, பஞ்சாபிலோ, அல்லது ஐக்கிய மாகாணத்திலோ, ஒரு கிராமத்திற்குள் சென்றால்

அங்கு மும்மரமாக உழுதுகொண்டிருக்கிற ஒரு முஸ்லிம் விவசாயி அதே தொழில் செய்துகொண்டிருக்கும் ஹிந்துவிலிருந்து தன்னை அலாதியாகப் பிரித்துக் காட்டுகிற உடுப்பணிந்து கொண்டிருப்பதாகக் காண மாட்டான். பெஸ் குல்லாயைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அது இந்திய மயமற்றது; சமீபத்தில் தான் இந்நாட்டில் நுழைக்கப்பட்டது. படித்தவர்களிற் சிலர் துருக்கியரைப் பின்பற்றி அதை அணியலானார்கள். துருக்கியரோ அதை இப்பொழுது கைவிட்டு விட்டார்கள்.

ஹிந்துக்களைக் காட்டிலும் முஸ்லிம்கள் அதிகமாகப் பைஜமாக்களை அணிகிறார்கள். ஆகவே சில இடங்களில் அது அவர்களுடைய தனி உடை என்று கருதப்படக்கூடும் ஆனால் உண்மை அப்படியல்ல. பைஜாமா அணிகிற ஹிந்துக்கள் கொஞ்சப்பேரல்ல. முஸல்மான்களில் பெரும்பாலார் அதை அணிகிறதுமில்லை. ஹிந்துக்களுடைய தனி உடுப்பு தோத்தி. அந்தச் சொல் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியது. அதைத்தான் உண்மையாக இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலார் ஏதாவதொரு தினுசில் உடுத்துக்கொள்கிறார்கள். கிராமங்களை நன்கறிந்தயாரும், அதிகமாகக் கிராமங்களில் உள்ள முஸ்லிம் பொதுமக்களை நன்கறிந்தயாரும், இதைச் சுலப்மாக ஒப்புக்கொள்வர்.

ஆபரணங்களின் ஒற்றுமை பர்தாவைத்தாண்டி, அந்தப்புரத்திற்குள்ளும் சென்றிருக்கிறது. பெண்கள் அணியும் அநேக ஆபரணங்கள் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொது. அவைகளின் பெயர்களும் ஹிந்து அல்லது முஸ்லிம் ஆதாரத்திலிருந்து தோன்றியவை. அவைகளை அணிவது ஹிந்துப் பெண்களா அல்லது முஸ்லிம் பெண்களா என்பதைப் பொறுத்து அவைகளுக்குப் பெயர் வழங்கப்படவில்லை அதைப் போல இந்தியா முழுதும் மாதர்களுக்குப் பொதுவான ஆடை சேலை. அதை ஹிந்துமாதரும் முஸ்லிம் மாதரும் உடுத்துகிறார்கள் வடமேற்குப் பகுதியிற் சில பாகங்களிற் போல, சில இடங்களில் மாதர் பைஜாமா அணிகிறார்களென்றால் அதை முஸ்லிம் மாதர் மாத்திரம் அணிவதில்லை. சீக்கிய ஹிந்துப் பெண்களுந்தான் அவைகளை அணிகிறார்கள். குன்றுப்பிரதேசங்களில் கடுங்குளிர் காரணமாக எல்லோருமே பைஜாமாக்கள் அணிகிறார்கள்.

பர்தா

இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டான் யாருக்கும் திடீரெனப் புலப்படுகிற ஒரு சமூக வழக்கம் பர்தா அல்லது கோஷா. இந்தியாவில் அது ஒரு புது அமைப்பை ஏற்படுத்திக்கொண்டாலும் சுத்தமாக அது ஓர் இஸ்லாமிய வழக்கம். இஸ்லாமிய ஷாரியத்தின் பிரகாரம், மாதர் வீட்டுக்கு வெளியே போவது தடுக்கப்படவில்லை என்று அறிகிறேன். உடம்பை மூடுவதைப் போல் பர்தாவால் முகத்தையும் மூடிக் கொள்ள வேண்டும். இந்தியாவில் பொதுவாக மாதர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பணக்காரர்களால் மாதரை வீட்டுக்குள் வைத்திருக்க முடியும். அது முடியாத ஏழைகள் பலவித அலுவலாகவும் வெளியே போகவேண்டியதாக இருக்கிறது.

பழைய ஹிந்து வழக்கம் பர்தாவை ஏற்கவுமில்லை; போற்றவுமில்லை. மணாளனோடு நின்று செயலாற்றக் கூடிய எல்லாக் காரியங்களிலும் பெண் வெளி வந்து பங்கெடுத்திருக்கிறாளென்பதற்கு வடமொழி இலக்கியங்களில் நிறையச் சான்றுகளிருக்கின்றன. தற்காலத்திய பர்தா வழக்கம் முஸல்மான்களிடமிருந்து முழுதும் கடன்வாங்கப்பட்டது. முஸ்லிம் ஆதிக்கத்தின் கீழ் வந்த இடங்களிலே இது கடுமையாக மேற்கொள்ளப்படுவதைக் காணலாம். வடநாட்டிற் போலத் தென்னாட்டில் முஸ்லிம் ஆதிக்கம் அதிகம் நுழையாததால் அங்கு இது அவ்வளவாகக் காணப்படவில்லை. முஸ்லிம் அரசாங்கத்தாரைப் பின்பற்றிய சில குடும்பங்களில்தான் இதைக் காணலாம். இதை ஒழிக்கத் தோன்றிய சீர்திருத்தம், ஹிந்துக்களிடையே வெகுவாக முன்னேறுகிறது. முஸ்லிம்களிடை அவ்வளவாக முன்னேறாததற்கு, இஸ்லாமில் ஏதோ அதற்குச் சிறிய அனுமதி இருக்கிறது; ஹிந்துமதத்தில் அவ்விதம் இல்லை.

இவ்விதமாக இரு வகுப்புக்களும் ஒன்றையொன்று பாதிக்கின்றன என்பது மேலே கூறிய உண்மைகளினின்று தெரியவரும். இவ்வகுப்புகளுக்குள் மத வேறுபாடுகள் இருக்கின்றன. அவ்வேறுபாடுகள் அவர்களுடைய சமூகப்பழக்க வழக்கங்களை வேறு வேறு வகையில் உருப்படுத்தியிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை என்றாலும், இவ்விரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவ்வகுப்புக்கள் தம்முள் கலந்தொன்றாக வில்லை என்பது உண்மை; ஒன்றையொன்று முழுதும் உட்கொள்ள முடியவில்லை; இது ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்குமில்லை. இஸ்லாம் வெளிநாட்டிற் பிறந்தது. அதைத் தழுவியவர்களின் வாழ்வை அடக்கியாண்டு செந்நெறிப் படுத்தும் சட்டங்கள் முழுதும் அதில் உண்டு. அச்சட்டங்கள், வேறு பின்னமைப்பில் தோன்றியவை. ஆகவே அது ஹிந்து மதத்தால் உட்கொள்ளப்படுவது முடியாத காரியமில்லையென்றாலும் அந்நிகழ்வைக் கடினமாக்குகிறது. இஸ்லாமும் ஹிந்து மதத்தை உட்கொள்ள இயலவில்லை. இந்து இலக்

கியம், ஆன்மஞானம், சமயம் முதலியன சிறந்த நிலைக்குக் கொண்டு வரப்பட்டவை; கோடிக்கணக்கான மக்களால் போற்றி வழங்கப்படுபவை: ஹிந்துமதம், இந்திய மண்ணிற் பிறந்து வளர்ந்து தன்னை எதிர்த்த பிரிவுகளை யெல்லாம் நாளடைவில் உட்கொண்டு விட்டது. ஹிந்து புத்த மதங்களின் உறவை எழுதப் புகுந்த ரைஸ்டேவிட்ஸ் கூறுகிறார்: 'ஹிந்து மதம் இதுவரையும் உலகம் காணாதபடி கருத்துக்கும் பேச்சுக்கும் முழுச்சுதந்திரத்தை அனுமதிக்கிறது. வேதங்கள் உபநிஷத்துக்கள் தோன்றிய ஆதி நாட்களிலிருந்தே இந்தப் போக்கு இருந்து வந்திருக்கிறது பலப்பட்ட சித்தாந்தங்களும் ஆன்ம ஞானமும் தோன்றுவதற்கு இதுவே காரணமாகும். ஆகையால் ஓர் ஹிந்து கண்டிப்பாகக் கடைபிடிக்கவேண்டிய சமய வரம்பு கிடையாது. ஆனால் ஹிந்து மதம், ஒரு மனிதன் தன் மட்டில் எப்படி நடக்க வேண்டும்: சமூகத்தில் எப்படி நடக்கவேண்டும் என்று சில விதிகளை வற்புறுத்துகிறது இவ்விதிகள் இடத்துக்கு இடம், காலத்திற்கேற்ப, சமய சந்தர்ப்பங்களை யொட்டி மாறுபட்டிருக்கின்றன. ஆகவே ஹிந்துக்களிடையே சமூக சீர்திருத்தத்திற்கு விரிவான இடம் இருக்கிறது. வளையக்கூடிய மென்கொம்புபோன்ற இத்தன்மையே மாறிவரும் நிலைமைகளை யொட்டி இதுவும் திருந்துவதற்கு உதவுகிறது.

அதுமட்டுமல்ல. இதைப்போன்று நெடுநாளைய சமய, ஆன்மஞானத் துறையற்ற கணக்கில்லாத மதங்களைத் தனக்குள்ளாக்கி விட்டதற்கும் இதுவே காரணம். சமூக நிலைக்கேற்றபடி மாறிக்கொள்ளும் தன்மையும் கருத்துச்சுதந்திரமும் இதற்கெதிரியாக முளைத்த கிளைகளை உட்கொள்ளப் பெரிதும் உதவின; புத்தனையாக்கியதுபோல, தன்னை எதிர்க்கின்ற கிளை மதத்தலைவர்களைத் தெய்வமாக்கவும் தயங்கவில்லை. புத்தமதக் கண்டனங்களை நூல்களில் காண முடியுமென்றாலும், புத்தன் ஓர் அவதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டான். இம்முரண்பாடு ஹிந்து, புத்த மதக்கலப்பு காலத்தில் தோன்றிய கருத்துப் போராட்டத்தின் அறிகுறியாகும். இன்று மதத்தையும் அதனுடைய அறவொழுக்க நெறிகளத்தனையும் ஹிந்து மதம் தனதாக்கிக் கொண்டுவிட்டது புத்த மதம் பிறந்த நாட்டில் புத்த மதத்தினன் ஒருவனுமில்லை. ஹிந்து மதத்திலிருந்து கிளைத்து வெடித்தது புத்த மதம். அதனுடைய சித்தாந்தம் கருவிலும், உருவிலும் ஹிந்து மதப் பின்னமைப்புக் கொண்டது. ஆகவே அது இந்தியாவில் ஹிந்து மதத்தில் சீக்கிரம் கரைந்துவிட்டது. ஆனால் வேறு மதத்தையோ, தத்துவத்தையோ, இது உட்கொள்ளவும் அல்லது இதை வேறு மதமோ தத்துவமோ உட்கொள்ளவும் சந்தர்ப்பமில்லாத வெளி நாடுகளில், இது ஒரு தனி மதமாகச் செழித்தது. ஆகவே இத்தகைய பின்னமைப்பில் ஹிந்து மதம், இஸ்லாமை உட்கொள்ளவில்லை, உட்கொள்ளப்படவுமில்லை இவை முடியவும் முடியாது இவ்விரு வகுப்பாரும் பக்கத்தில் பக்கத்தில் வாழ்ந்து வளர்ந்தது இரு சாராருக்கும் நன்மையளித்திருக்கிறதென்று நான் நம்புகிறேன், அவர்களுடைய நெடுங்காலச் சரித்திரத் தொடர்பில் ஏற்பட்ட பழைய, மறந்துபோன சம்பவங்களையும் கதைகளையும் கிண்டுவது அவ்விரு சாராரும் வேறு வேறானவர்கள் என்பதைக் காட்டுவதற்காகவும் வேறு வகையில் சொல்லப்போனால், அவர்களிடையில் போட்டியையும் கெடுதல் புத்தியையும் உண்டாக்குவதற்காகவுமே. இவ்வாறு கிண்டுவது அவர்களுக்குச் சேவை செய்வதாகாது. மனம் நெருங்கிய நட்பு முறையிலும் நல்லெண்ணத்துடனும் நூற்றுக் கணக்கான ஆண்டுகள் இவர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்ற உண்மையை அறிய முன்வருதல் நலம் தரும். கண்டிப்பாகப் பெருமையும் அளிக்கும். இதற்கெல்லாம் மேலாக இன்னொரு விஷயமென்னவென்றால் வருங்காலத்தில் இத்தொடர்பிலிருந்து யாரும் விடுபட்டுக்கொள்ள முடியாதென்பதேயாம்.

இரண்டு சரித்திரப் பேராசிரியர்களிலிருந்துமேற்கோள்கள் எடுத்துக்காட்டி இப்பகுதியைமுடிப்பதைக் காட்டிலும் நான் சிறப்பாக ஒன்றும் செய்துவிட முடியாது இவர்களில் ஒருவர் ஹிந்து டாக்டர் தாராசந்த் என்பவர் இவருடைய சொற்களை இதற்குமுந்தியும் அடிக்கடி மேற்கோள் காட்டியிருக்கிறோம். மற்றவர் ஒரு முஸ்லிம்; கல்கத்தா சர்வ கலாசாலையில் சட்டம், இஸ்லாமியச் சரித்திரமாகிய வற்றின் பேராசிரியர் திரு சலாஹு-தின் கோதா பக்ஷ்.

"ஆஸாத்"

(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

உங்கள் ஊர் ஏஜெண்டிடம் கேளுங்கள், உங்கள் ஊரில் "ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசியக் கடமை. "ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ. 6/- (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

டாக்டர் தாராசந்த் எழுதுகிறார் :—

‘ இந்திய வாழ்வின் எல்லாத் துறைகளிலும் முஸ்லிம் செல்வாக்கு எவ்வளவுதூரம் நுழைந்திருக்கிறதென்பதை மிகைப்படுத்திக் கூறமுடியாது. பழக்கங்கள், வீட்டு வாழ்வின் சின்னஞ்சிறு அம்சங்கள், இசை, உடை முறை, சமையல் முறை, கலியாணச் சடங்கு, திருவிழாக்கள், பொருட்காட்சிகள், மாரத, ரஜபுத்திர. சீக்கிய அரசவைச் சம்பிரதாயங்கள் இவைகளில் தவிர வேறெங்கும் அதை அவ்வளவு தெளிவாகக் காணமுடியாது. பாபர், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே மாதிரி வாழ்வதையும் நினைப்பதையும் கண்டார். அவர்களிடை ஒரு தனியான “ஹிந்துஸ்தானி முறை ” இருப்பதைக் கண்டார் அவரது பின் சந்ததியார் இந்தச் சொத்தைப் புகழுற அணி செய்து அற்புதமாக வளப்படுத்தினார்கள். அவர்கள் வைத்து விட்டுச் சென்ற இப்பூர்வீகச் சொத்தினால் இந்தியா பெருமை கொள்ளலாம்.’

திரு. சலாஹுதீன் கோதா பக்ஷ் எழுதுகிறார்:—

‘ மகம்மதியர்கள் ஒரு தனி ஜாதியென்று நமக்கு அடிக்கடி கூறப்படுகிறது மேலும்: ஆரியரும் செமித்தியரும் வேறாக இருப்பதுபோல ஹிந்துக்களும் மஹமதியர்களும் வெவ்வேறானவர்கள். இவர்களிடையே வாழ்க்கையின் அடிவேரிலிருந்தே வேறுபாடுகள் இருக்கின்றன ; பழக்கங்கள், குணம், சமூக வழக்கங்கள் ; இனவகை இத்தனையிலும் வேறுபாடுகள் ; இவ்விரு இனமும் ஒன்றாகக் கலக்க முடியாதபடி வேறு பாடுகள் அவ்வளவு முக்கியமாகவும் பெரிதாகவும் இருக்கின்றன. இவைகள் ஒன்றுவது நடக்கிற காரியமில்லை. கிட்டாதது நடைமுறைக்கு ஒத்துவராத வெறுங்கனவு என்றெல்லாம் கூறப்படுகிறது. இந்த விவகாரம் ஒழுங்கானதென்று நான் கூறமுடியாது. ஹிந்துக்களுக்கும் மஹமதியர்களுக்கும் ஆங்கிலேயர் எப்படியோ, அப்படியே ஹிந்துக்களுக்கு முஹம்மதியர்கள் வேறுபட்டவர்கள் ; வெளியிலிருந்துவந்து நாடு பிடித்தவர்கள். சரி, இதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அவர்கள் நூற்றுக் கணக்கான வருஷங்களாகப் பக்கத்தில் பக்கத்தில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்; இந்நாட்டு மக்களுடன் தாராளமாகப்பழகி வந்திருக்கிறார்கள். ஒருவர் வாழ்வை ஒருவர் மாற்றியமைத்திருக்கின்றனர். இஸ்லாமியர் இந்திய மாதரில் பெண் கொண்டிருக்கின்றனர். ஆங்காங்குள்ள பழக்கங்களை அனுசரித்திருக்கின்றனர்; சுருங்கக் கூறின் இந்நாட்டுக்கே உரிய குணாதிசயங்களிலும் சிறப்பியல்புகளிலும் ஊறிப் போய் விட்டார்கள். இவ்விஷயங்களை நாம் மறக்க இயலாது. இதற்கு அசைக்க முடியாத ஆதாரங்கள் இருக்கின்றன. இவர்களது கல்யாணச் சடங்குகள் ஹிந்து மயமானவை. பெண்களின் பழக்கங்களிற் பலவும் அப்படியே. மண வாழ்க்கையின் அடையாளமான சிந்தூரப்பொட்டு, கைம்மை காரணமாக உணவிலும், உடையிலும் கடும் நியதி, மறு மணத்தை மறுப்பதோடன்றிக் கண்டித்தல், ஜெனனிலுள்ள இன்னும் எத்தனையோ சின்னஞ் சிறு படிக்கங்கள் இதற்கு ஆதாரங்களாம். இந்திய ஜனத்தொயில் இருபிரிவாயிருக்கின்ற இவர்களிடையே இத்தனை காரியமும் மேலெழுந்த வாரியான உறவைக் காட்டவில்லை. மொழியொன்றாக இருப்பதும், உடை ஒரே மாதிரியிருப்பதும் இதற்குச் சரியானசான்றாகும். மேலும், நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் கூறிக்கொள்ளுங்கள் மகமதிய ஜனத்தொகையில் பெரும் பகுதியினர் மதம் மாறிய ஹிந்துக்களே ஹிந்து மஹமதிய மதங்கள் ஒன்றையொன்று பாதிக்கின்றன; சமூகப் படிக்கங்களை மாற்றியமைத்திருக்கின்றன. பரஸ்பரம் ஒரு மத சாயம் இன்னொன்றில் கலந்திருக்கிறது. முஸ்லிம்கள் இந்நாட்டைக் கைப்பற்றியதிலிருந்து ஹிந்து மதம் இஸ்லாம் மதம், என்ற இரண்டு ஆறுகள் இந்தியாவில் பக்கத்தில் பக்கத்தில் நெடுகப் பாய்ந்தோடி ஒன்று கலந்தன என்பதை தெளிவாய் எடுத்துக் காட்டுகின்றன.

தற்போதய நமது சமூகவாழ்வு மென்மையும் எழிலும் நிறைந்த ஆடைக்கொப்பாகும். இவ்வாடையை ஹிந்துமுஸ்லிம்களாகிய இருவகுப்பாரைச் சேர்ந்த ஆடவர் பெண்டிரனைவரும் அனேக நூற்றாண்டுகளாக நெய்தமைத்திருக்கிறார்கள்; வேண்டுமென்று கருதியோ அல்லது தன்னிச்சையாகவோ அமைத்து விட்டார்கள். இவ்வரிய சமூகத்தினுடைய ஊடுபாவுகளை விளங்காத்தனமான அரசியலின் கொடிய, விவேகமற்ற கைகள் பிய்த்தெறிவதா ?

“ இந்தியா பிரிக்கப்பட்டால் ”
(பாபூ ராஜேந்திரபிரசாத்)

ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா துகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.
அதை ஆதரிப்பது உங்கள் தேசீயக்கடமை.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

காயிதே ஆஜமின் தாராளம்.

—(மௌலானா மதனியின் குண்டுமாரி.)—

(9-வது இதழ் தொடர்ச்சி)

ஜமீன்தார் 1941.ளு மார்ச்சுமீ 25உ பக்கம் 8-ல் கூறுவதாவது :—

" அட்லாண்டிக் முதல் பசிபிக் வரையில் வியாபித்திருக்கும் முஸ்லிம்களின் மாபெரும் கூட்டுறவில் ஒரு பாகமாக இந்திய மு லிம்கள் உள்ளனர். என்பதை நான் பட்டவர்த்தனமாக கூறுகின்றேன். ஆப்கானிஸ்தானம், இராக், துருக்கியும் இந்த கூட்டுறவின் பாகங்கள்தான். இந்த யுத்தத்தில் பிரிட்டிஷாருடன் இந்த நாடுகள் சேர்ந்து இருப்பதைக்குறித்து நான் சந்தோஷப்படுகிறேன். இந்திய முஸ்லிம்களாகிய நாங்களும் (சென்ற காலத்தில் அபிப்பிராய பேதம் இருப்பினும்) ஆங்கிலேயர்களுடன் இருக்கின்றோம் இந்த சமயத்திலும் உங்களுக்கு உதவியளிக்க ஆசைப்படுகிறோம்,"

இதற்கு முன் 7-வது பக்கத்தில் கூறியிருப்பதாவது:—

"பிரிட்டிஷார் .மரணவன்தையில் சிக்குண்டு பரிதவிக்கும் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தொந்திரவு செய்ய முஸ்லிம லீக் தயாராக இல்லை. பட்டாள ஆள்சேமிப்பில் காங்கிரசைப்போல் முட்டுக்கட்டை போடவோ, சாத்விக சட்டமறுப்பு ஆயுதத்தை உபயோகிக்கவோ அது விரும்பவில்லை. எதிர்ப்பு மனப்பான்மையற்ற நடுநிலைமையை அனுஷ்டிக்கின்றது. பிரிட்டிஷாரின் இந்த கஷ்டகாலத்தில் இஷ்டப்பட்டால் உதவி செய்யலாம் என லீக் தனிப்பட்ட முறையில் லீகர்களுக்கு அனுமதித்திருக்கின்றது. முஸ்லிம் லீகில் தலை சிறந்து விளங்கும் பஞ்சாப் பிரதமர் சர் சிகந்தர் ஹயாத்கான் செய்திருக்கும் மிலெடரி படை உதவிக்கு நிகராய் யாரையும் சொல்ல முடியாது ."

இதற்கு முன் பக்கம் 2, காலம் 5-ல் கூறுவதாவது:— முஸ்லிம் லீகர்களாகிய நாங்களும் தேசத்தின் இதர ஸ்தாபனங்களைப் போல் பிரிட்டிஷாரின் வெற்றியை நாடுகின்றோம். பிரிட்டிஷாரை வெற்றி வீரர்களாயும், ஜயத்தின் சின்னங்களாயும் பார்க்க ஆசைப்படுகின்றோம்.

நவாப் ஜாதாவின் ஹிருதய ஒலி.

1941 மார்ச்சு 13 ல் நவாப் ஜாதா லியாகத் அலிகான் மத்திய சட்ட சபையில் பொருளாதார தீர்மானத்தை ஒட்டி பேசுகையில் கூறினதாவது:—

' பின்னாலிருந்து முதுகில் குத்துபவர்களுடைய பேச்சை அரசாங்கம் கேட்கின்றது. ஆனால் உதவி செய்ய முன் வருகின்றவர்களை திரும்பியும் பார்க்கிறதில்லை."

உண்மையில் லீகின் அஸ்திவாரக்கல் இன்றைக்கும் அசையவில்லை. பிரிட்டிஷாருக்கு உதவுவதில் உயிர், பொருள், கவுரவம், மதம் யாவற்றையும் தியாகம்செய்வது, பிரிட்டிஷாரின்றி முஸ்லிம்கள் வாழ முடியாது என்று நினைப்பது, இதே கருத்தை பாமர முஸ்லிம்களிடையே பல புனைப் பெயர்களுடன் பிரசாரம் செய்வது ; ஹிந்துக்களுடன் வேற்றுமையை வளர்ப்பது ; அவர்களைக்கண்டு முஸ்லிம்கள் பயப்படும்படி உபதேசிப்பது, இந்திய தேசிய காங்கிரசை வெறுக்கும்படி தூண்டுவதுதான் லீகினுடைய அதி முக்கிய வேலைகளாய் இருந்து வருகின்றன.

ஆர்மி பில்.

ஆர்மி பில் பாஸ் செய்யப்பட்டது. பட்டாள ஆள் சேமிப்பில் முட்டுக்கட்டை போடுபவர்களுக்கு ஒரு வருஷ சிறைவாச தண்டனை தீர்மானிக்கப்பட்டது. இது பிரிட்டிஷாருக்கு உதவியில்லாமல் வேறு என்ன ? எல்லா காங்கிரஸ்காரர்களும் காங்கிரஸ் அல்லாத ஹிந்துக்களும் சட்டசபையில் இதை எதிர்த்தனர் முஸ்லீம் லீக் ஆதரித்து தீர்மானம்நிறைவேறியது அந்த சமயத்தில் காயிதே ஆஜம் உள்பட இதர முஸ்லிம் லீக் மெம்பர்கள் வைஸ்ராயுடைய வாக்குறுதியை நம்பவேண்டுமென்றும்; இந்திய சேனைகள் முஸ்லிம் நாடுகளில் கொண்டு போகப்படமாட்டாது என்றும் இதற்கு மாறாக நடந்தால் நாம் அப்படிச் செய்துவிடுவோம், இப்படிச்செய்து விடுவோம் என்றும் காரசாரமான வார்த்தைகளால் வாய்ப்பந்தல் போட்டார்கள். ஆனால் இதே இந்திய சேனைகள் ஈரான், ஈராக், மெஸபடோமியா, எகிப்துமுதலியமுஸ்லிம் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டபோது லீக் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது ? பிரிட்டிஷாருக்கு விரோதமாக எந்த காரியமும் எவ்வித கிளர்ச்சியும் செய்தார்களில்லை.

இந்த யுத்தத்தில் லீக் நடுநிலைமை வகித்தது. ஆனால் தனிப்பட்ட முறையில் லீகர்களை பிரிட்டிஷாருக்கு உதவியளிக்க அனுமதித்தது. இவ்விதம் அடியிலிருந்து உச்சிவரையிலுள்ள லீகர்கள் பிரிட்டிஷாருக்குச் செய்த மாபெரும் உதவிக்கு நிகரேயில்லை. (ஜமீன்தார் மார்ச்சு 25-1941.)

லீக் வெள்ளையர்களிடம் பாகிஸ்தானைக் கோருகிறது. பாகிஸ்தான் பாதுகாப்பையும் அமைதியையும் இனி சமாளித்துக்கொள்ளும் என்று பிரிட்டிஷார் நினைக்கும் வரையில் வெளி நாட்டுக்கொள்கையும், உள்நாட்டு பாதுகாப்பும் அவர்கள் கையில் இருந்து வரும் என்று சொல்லுகிறது. (இதற்கு மாறாக காங்கிரஸ் பரிபூரண சுதந்திரத்தைக் கோருகிறது) பாதுகாப்பு பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் இருக்கும் வரையில் முஸ்லிம்களின் பூரண உதவி அதற்கு கிடைத்துக் கொண்டிருக்கும் என்பது வெளிப்படையான விஷயம். இது எத்தனை காலம் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். ஆங்கில ஐரோப்பிய ஆதிக்கத்தின் சரித்திரம் வாசியுங்கள் (மதினா 1944 மார்ச்சு 5உ பாகிஸ்தானுக்கு பிறகு பிரிட்டிஷ் ஆதிக்கம்)

பாகிஸ்தானில் வெள்ளை ஆட்சி.

லண்டன் நியூஸ் கிரானிகலின் வேண்டுகோளுக்கு இணங்கி காயிதே ஆஜம் 1945- பிப்ரவரி 29-ல் அளித்த பாகிஸ்தானைப்பற்றிய விளக்கத்தின் ஒரு பகுதி "பிரிட்டிஷார் இந்தியாவை துண்டாடி மூன்றே மாதங்களுக்குள் ஹிந்துக்கள் வாய்களை பொத்திக்கொள்வர். இவ்விரு பாகங்களும் எதுவரையில் சௌஜன்யமாக பரஸ்பரம் இருக்கமாட்டார்களோ அதுவரையில் பிரிட்டிஷாரின் மிலிடெரி ஆதிக்கமும்' அன்னிய அதிகாரமும் இங்கு இருக்கவேண்டியது அவசியம். இவ்விதம் குறைந்த பட்சம் எகிப்தைப் போல உள்நாட்டில் நாம் சுதந்திரமாக இருக்கமுடியும் சட்டரீதியாக ஐந்து மரகாணங்களில் முஸ்லிம் லீகுக்கு உட்பட்டு பாகிஸ்தான் ஆட்சி இன்றைக்கும் நடந்துகொண்டிருக்கிறது." இந்த அறிக்கையை குறித்து பாகிஸ்தான் திட்டத்தை முதலில் தயாரித்தவரும் லீகில் நீண்டகாலம் இருந்தவருமான டாக்டர் சையத் அப்துல் லதீப் சாகிப் (ஹைதராபாத்) முஸ்லிம்களையும் குறிப்பாக லீகர்களையும் எச்சரித்து கூறுவதாவது:— முஸ்லிம்கள் தங்களுடைய காயிதே ஆஜம் தங்களை எத்திசையில் கொண்டு செல்லுகிறார் என்பதை கவனிக்கவேண்டும். மிஸ்டர் ஜின்னா பாகிஸ்தான் விஷயத்தில் அழுத்தமானவர் அல்ல என்று ஆரம்பத்திலிருந்தே நான் உணர்ந்து இருந்தேன். அவர் சுதந்திர பாகிஸ்தானுக்கு பதிலாக பிரிட்டிஷ் ஆதரவின் கீழ் நீண்டகாலத்தில் படிப்படியாக எகிப்தினுடைய நிலைமையை அடையும் ஓர் சமஸ்தானத்தை விரும்புவதாக வெளியிட்டுவிட்டார். எகிப்து சட்டரீதியாக சுதந்திர நாடாயினும் தன்னுடைய காரியங்களில் பிரிட்டிஷாரை எதிர்பார்த்து நிற்கவேண்டியிருக்கிறது. கராச்சியில் இந்தியாவை துண்டாடிவிட்டு வெளியேறு என்று கோஷித்த அவர் இன்று இந்தியாவை துண்டாடி நீடித்து ஆளு என்று வேண்டுகிறார். ஹிந்துஸ்தான், பாகிஸ்தான் பிரதேசங்களின் பாதுகாப்பும் வெளிநாட்டுக் கொள்கையும் பிரிட்டிஷாரிடம் ஒப்புவிக்க முயற்சிக்கிறார். என்னே! மிஸ்டர் ஜின்னாவின் முன்னேற்றம், எந்த ஒரு வெள்ளையனாவது இதற்கு நன்றி செலுத்துவானா? பிரிட்டிஷ் பிற்போக்காளர்களும் இதைக்கண்டு வருந்தாமல் இருக்கமுடியாது. யுத்தம் முடிந்து இந்தியாவுக்கு (வேண்டுமாயின் மாகாண வாரியாக) சுதந்திரம் கொடுக்கப்படுமென இங்கிலீஷ்காரர்கள் கிரிப்ஸ் திட்டத்தில் வாக்களித்தார்கள். இதர கட்சிகளுடன் ஒத்துழைத்து அரசியல் முன்னேற்றம் அடைவதை விட்டு மிஸ்டர் ஜின்னா இப்பொழுது உள்ள அடிமையில் திருப்தி அடைகிறார். பொதுவாக முஸ்லிம் லீகர்கள் இவருடைய போக்கை ஆதரிப்பார்களா?

(அஜ்மல். பம்பாய் 1944 மார்ச்சு 6-)

இஸ்லாமுக்கு எதிராக யுத்தம்

லீக் ஷரீயத் பில்லை தோற்கடித்தது. இஸ்லாமுக்கும், முஸ்லிம்களுக்கும் இதன் அவசியத்தைக் குறித்து விளக்கவேண்டியதில்லை

(குலாபில்) பெண்ணின் விவாக ரத்துரிமையை முஸ்லிம் லீக் ஷரீயத்திற்கு புறம்பானதாக்கி பாழ்படுத்திவிட்டது.

காஜிபில் லீகினால் எதிர்க்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டது. முஸ்லிம்களுக்கு இதனுடைய தேவையின் அவசியம் சரித்திர பூர்வம் வாய்ந்தது.

சாரதாபில் பாஸ் செய்ய காயிதே ஆஜம் எடுத்துக் கொண்ட முயற்சியால் அவருடைய மத எதிர்ப்பு மனப்பான்மை வெளிப்படுகிறது.

முஸ்லிம் லீக் மந்திரிசபைகள் பிரிட்டிஷாருக்கு பூரண உதவியளித்து இந்தியர்களுக்கும், குறிப்பாக முஸ்லிம்களுக்கும் கேடுவிளைவிப்பதில் சகல வழிகளையும் அனுஷ்டித்தன. வங்காளத்தில் லீக் மந்திரி சபை லக்ஷக்கணக்கான மக்களை பட்டினிக்குப் பலியிட்டது. மிஸ்டர் எமரி 19 லட்சம்வரையில் ஒப்புக்கொண்டால் பத்திரிகைகளில் 90 லட்சத்திற்குமேல் கணக்கு கிடைக்கிறது. முஸ்லிம்கள் பெருவாரியாகவும் ஏழைகளாகவும் உள்ளனர். இம்மாகாணத்தில் இவர்களே உயிர்நீத்தவர்கள்

(வுட்ஹெட் கமிஷன் ரிப்போர்ட்.)

லீக் மந்திரிசபைகள் லீகர்களுக்கும், நண்பர்களுக்கும் வேண்டியவர்களுக்கும், மந்திரிகளுக்கும் காண்ட்ராக்டுகள் கொடுத்து பணக்காரர்களாயும் கண்ட்ரோல் வகையறாவின் மூலம் பொதுஜனங்களை ஏழைகளாகவும் செய்துவிட்டது. கொள்ளை லாபத்தில் லீக் மந்திரி சபைகளுக்கு நிகர் காங்கிரஸ் மந்திரி

அ. நி. சபையில் முஸ்லிம் லீக் தலைவர் ஜனுப் இஸ்மாயீல் சாஹிப்.

தனித் தொகுதி முறை இருக்க வேண்டுமாம் !

“ இனி எதற்காக முஸ்லிம் லீக் இந்திய டொமினியனில் நீடிக்கவேண்டும் ? ’ என்ற பல நண்பர்களின் கேள்விகளுக்கு ஜனுப் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் “ தனித்தொகுதி முறை இனியும் இருக்கத்தான் போகிறது. முஸ்லிம் லீகை வைத்துக்கொண்டு தேர்தல்களில் நாமே தேர்ந்தெடுக்கப்படலாம்” என்று சொல்லுகிறாராம்.

அவருக்கு தனித்தொகுதி முறை இனி இருக்க முடியாது என்று தெரிந்திருப்பினும் முஸ்லிம் லீக் ஸ்தாபனத்தை நீடிப்பதற்கு இம்முறையை கையாளுகிறார் என்று தெரிகிறது அரசியல் நிர்ணய சபையில் தனித்தொகுதியை வற்புறுத்தி தன் சகாக்களை ஏமாற்றமடையச் செய்கிறார்போலும்.

இன்று நாட்டில் ஏற்பட்ட பிரிவினையும், இரத்தக்கிளரியும் தனித்தொகுதி முறையின் பலாபலனேயாகும் என்பதை அவர் உணர்ந்திருக்கக்கூடும். பல வருஷங்களுக்கு முன் முஸ்லிம் லீக் சார்பாக தனித்தொகுதி கேட்கப்பட்டபோதே இங்கிலாந்திலேயே ஒரு தனி அரசியல் அறிவுடையவரென்று உலகம் போற்றும், மிஸ்டர் லாயினல் கிரிட்ஸ் கீழ் வருமாறு அழகாக விளக்கியுள்ளார்.

“ சில வருஷங்களாகவே தேர்தல் முறை இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலேய அரசாங்கத்தார் இதில் தனித் தொகுதியை புகுத்தி ஒரு பெரிய தவறைச் செய்திருக்கின்றனர் இதை விட பெரியதவறை அவர்கள் எப்பொழுதும் செய்யவில்லையென்று கருதுகிறேன் தனித்தொகுதி முறை இந்தியாவில் நிரந்தரமாக இருந்துவிட்டால் ஒரு புது விதமான தனி இன உணர்ச்சி ஏற்பட்டுவிடும். இந்த உணர்ச்சி இந்தியாவின் கௌரவ வாழ்வை சீர் குலையச் செய்துவிடும். எதுவரையில் தனித்தொகுதி முறை நிலைத்திருக்குமே அதுவரை இந்தியா ஒன்றுபட்டு நிற்காது. இம்முறை நீடித்து விட்டால் அதை அகற்றுவது மிகவும் சிரமமான காரியமாகிவிடும். சுருங்கச் சொல்லின் இம் முறையால் இந்தியாவுக்குள் உள்நாட்டு கலவரங்கள் கட்டுக்கடங்காத முறையில் இந்தியா பூராவும் பரவி இந்தியா ஒரு பயங்கர ரத்தக்களமாக மாறி, பிறகு அக்கிளரியே அத் தனித்தொகுதி முறையை ஒழித்துக்கட்டுவதற்கு காரணமாக அமையுமென்பது நிச்சயம்”

மிஸ்டர் லாயினல் கிரிட்ஸ் செய்த முன்னெச்சரிக்கையின்படி இந்தியர்களுக்குள் இக் தனித்தொகுதியினால் இன உணர்ச்சி மிகுந்து, பிரிவினை மனோபாவம் மேலோங்கி, உலகம் இதுவரை கண்டிராத இரத்தக்கிளரியுடன் முடிந்துவிட்டது. அவர்சொன்னதைப் போலவே அதே இரத்தக்கிளரி தனித்தொகுதிமுறை ஒழித்துக் கட்டுவதற்கு காரணமாகிவிட்டது. இப்படியிருக்க மறுபடியும் தனித்தொகுதி வேண்டுமென்று ஜனுப் இஸ்மாயீல்சாஹிப் எதற்காக வற்புறுத்துகிறார் என்பது தெரியவில்லை.

சபை காலத்திலோ அல்லது கவர்னர்கள் ஆட்சிபுரியும் மகாணங்களிலோ கிடைக்கவில்லை.

வங்காள முஸ்லிம்களின் கொலையாளிகள்.

அஜ்மல் 1945 ஜனவரி 5 (முஸ்லிம்லீக் காரியக் கமிட்டி மெம்பரின் திடுக்கிடத்தக்க அறிக்கை)

“சில லீக் மந்திரிசபைகள் தானியக்கொள்முதல் சிண்டிகேட்டைப் போன்ற குத்தகைதாரர்களுடைய கோஷ்டிகள் ஏற்படுத்திவிட்டன. இவைகளுக்கும், மந்திரி சபைகளுக்கும் தொடர்பு இருந்து வருகிறது. இந்த லீக் மந்திரிசபைகளின் காலத்தில் நிர்வாகஊழல்களினால் ஏற்பட்ட லஞ்சப்பேயின் தாண்டவத்திற்கு உதாரணம் இதற்குமுன் சரித்திரத்திலேயே கிடையாது. இந்த நாசத்தை விளைவிக்கும் விஷயங்கள் பொதுவாய் லீகர்களிடையே திகைப்பும், வெறுப்பும் உண்டுபண்ணிவிட்டன. கூடியசீக்கிரம் இந்தஊழல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படாவிடில் வரப்போகும் பொதுத் தேர்தல்களில் முஸ்லிம் லீகர்களுடைய நிலைமை கஷ்டத்துக்குள்ளாகுமென அவர்கள் அஞ்சுகின்றனர். முஸ்லிம்களின் ஒற்றுமை அவசியம் என்ற கோஷத்தினால் ஒரு பிரயோஜனமும் ஏற்படாது போய்விடும்.”

ஆனால் இன்றுவரை யாதொரு நிவர்த்தியும் செய்யப்படாமல் காரியங்கள் வழக்கம்போல் நடக்கின்றன.

லக்னோ ஒப்பந்தம் விளைத்தகேடு

காயிதே ஆஜமும், லீக் ஹை கமாண்டும் 1916ல் லக்னோ ஒப்பந்தத்தின் மூலம் முஸ்லிம் மெஜாரிடி மாகாணங்களில் முஸ்லிம் ஸ்தானங்களை குறித்து எப்பொழுதுமே இங்கு முஸ்லிம்கள் தலைதூக்க முடியாத சங்கடத்திற்குள்ளாக்கி இதற்கு பதிலாக முஸ்லிம்கள் மைனரிடியாயுள்ள மகாணங்களில் ஒன்று இரண்டுஸ்தானங்கள் அதிகப்படுத்தப்பட்டன. இதனால் சில முஸ்லிம்கள் சட்டசபை நாற்காலிகளில் ஆரோகணிப்பதை தவிர வேறு எவ்வித பிரயோஜனமும் ஏற்படவில்லை. ஆனால் இதன் விலைக்காக முஸ்லிம்கள் எல்லா இடங்களிலும் முடங்கிவிட்டனர்.

(தொடரும்.)

நமது ஏஜண்டுகள்:—

G. R. V, கிருஷ்ணன்,
நியூஸ் ஏஜண்ட்,
போளூர்.

G. ரபீகுத்தீன்,
பெரியதெரு,
நெல்லிக்குப்பம்.

WHOLE CEYLON AGENCY.
FOR
"AZAD"
EMMEL & Co.,
General Merchants & Commission Agents,
GAMPOLA, (CEYLON)

P. S முகம்மது மைதீன் சாகிப்,
ஷம்ஸுல்ஹுதா முஸ்லிம் சங்கம்,
அல்லிமுப்பன் தெரு, கடையநல்லூர்

M. S. M. கனி,
மரம், ஓடு வியாபாரம்,
கோபிசெட்டிப்பாளையம்.

ரா கணபதி,
C/o M. S. முனிசாமி,
ஈஸ்வரய்யர் சந்து,
மெயின் ரோடு, திண்டுக்கல்.

எஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது
"ஆஸாத்" விற்பனே செய்ய
ஏஜெண்டுகள் தேவை.

S. சம்பந்தம்,
நியூஸ் ஏஜண்ட், காட்டுமன்னார்குடி,

M. நாராயணன் நாயர்,
நியூஸ் ஏஜண்ட், : புதுக்கோட்டை.

G, சுப்பையா பிள்ளே,
நாச்சியார்கோவில்,

E. V. K. மீரான் சாஹிப்,
சத்திர தெரு, கல்லிடைக்குறிச்சி

முகம்மது சாலிஹ் சாஹிப்,
சாலீஹ் & ஸன்ஸ்,
எடத் தெரு, நாகப்பட்டிணம்.

P. K. E. ABDULLA,
News and Commission Agent,
"LATEEF BUILDINGS"
— VALANGAMAN (S. I.) —

பீ. மீரா மொய்தீன் சாகிப்,
ரெங்கோன் ஹால், காரைக்குடி.

S. S. முகம்மது இப்ருஹிம் மரைக்காயர்,
"ஆஸாத் ஸ்டோர்"
கடைத்தெரு, அதிராம்பட்டணம்.

G. அப்துல் லத்தீப்,
மணியக்காரத்தெரு, திருச்சி.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.